# G.C.E. A/L

# 100

# வர்த்தக நிறுவனங்கள்

(வரிமுறைஉட்பட)

# COMMERCE

## ECONOMICS

E.Selvanayagam
ROYAL COLLEGE

SARASU PUBLICATIONS
M-1, Bampalapitiya Flats,
COLOMBO - 4
Telephone: 580462

விலை ;
40.00 ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# G.C.E. A/L

# வரி முறை

# வர்த்தகநிறுவனங்கள்

## COMMERCE & FINANCE

வர்த்தகமும் நிதியும்

## ECONOMICS

பொருளியல்


**E. Selvanayagam**
ROYAL COLLEGE
COLOMBO - 7



**SARASU PUBLICATIONS**
D. 2/8 ANDERSON FLATS
COLOMBO - 5 ரூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

எமது பதிப்பகம் கணக்கியல், வர்த்தக பாடங்களில் அனுபவம் மிக்க இலங்கையின் முதல் தேசிய பாடசாலை ஆசிரியரின் நேரடி வழிகாட்டலில் வினா விடை நூல்களை வெளியிட்டு வருகின்றது. குறுகிய காலத்தில் க. பொ. த உயர்தர, சாதாரணதர மாணவர்களுக்கு எமது வினா விடை நூல்களே சிறந்த பெறு பேறுகளைப் பெற்றுக் கொடுத்தது. எமது வெளியீடுகளுக்கு கிடைக்கும் அதிக விற்பனை ஆதரவு காரணமாகவே நாம் குறைந்த விலையில் **(Computer, Offset)** அச்சுப்பதிவு செய்த நூல்களை வழங்குகின்றோம்.

க. பொ. த உயர்தரப் பரீட்சையை இலகுவாக சிறப்பாக அணுகுவதற்கான ஒரு படியாக **வரி முறையுட்பட வர்த்தக நிறுவனங்கள் ( 80)** என்ற இந்நூல் வெளியிடப்படுகின்றது. தனியார் கல்வி நிலைய போட்டிச் சூழலில் மாணவர்கள் அவசிய மற்ற அதிகம் கற்கும் நிர்ப்பந்தங்கள் தவிர்க்கப்பட சுருக்கமான குறிப்க்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. முக்கியத்துவம் குறைந்த பகுதிகள் மிகவும் சுருக்கமாக தரப்பட்டுள்ளது. பரீட்சைக்கு உதவும் நோக்கமானது. தனியான இரண்டு வினாக்களுக்கும் மற்றைய ல்லா வினாக்களுக்குமான பொதுக்குறிப்புக்கள் அடங்கியுள்ளது

பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள் மட்டத்திலான சகலபிரசுர **computer Typesetting, offset Pinting** வேலைகளைச் செய்து கொடுப்பதில் ஈடுபடுவதினை தெரியப்படுத்துவதில் மகிழ்ச்சி அடைகின்றோம். மிகவும் சிறப்பா குறைந்தசெலவில் அச்சிடல் வேலைகளைச்செய்ய எம்முடன் தெடர்பு கொள்ளுங்கள் . அச்சிடல் துறையின் நவீன வாய்ப்புக்களைப் பயபடுத்தி தொடர்ந்தும் பணியாற்ற உங்கள் ஆதரவினை வேண்டுகின்றோம்.

நன்றி

பதிப்பகத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி (Tax)

தனியாள் அல்லது நிறுவனம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ செலவினம்,வருமானம், சொத்துக்கள், உரிமைகள் என்பவற்றின் தொடர்பில் அரசாங்கத்திற்கு சட்டப்படி பணமாகச் செலுத்தும் கட்டணம் வரி எனப்படும். மத்திய அல்லது மாநில, மாகாண மற்றும் உள்ளூராட்சி அரசுகளுக்கு நேரடியாகவும் முகவர் மூலமாகவும் வரி செலுத்தப்படுகின்றது.

அரசர்களுக்கு மக்கள் தாமாக விரும்பி ஆரம்ப காலங்களில் பொருளாகவும் சேவையாகவும் செலுத்தியவரி தற்காலத்தில் (கட்டாயம்) சட்டம், காரணமாக செலுத்த நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இலங்கை அரசாங்கம் (ஏறக்குறைய 90%) கூடிய வருமானத்தை வரி மூலமாகவே பெற்றுக் கொள்கின்றது.

## வரி முறையின் முக்கியத்துவம்

1) அரச, சமூகசெலவினங்களுக்கான வருவாய் திரட்டல்
2) வளங்களைச் சிறப்பான முறையில் ஒதுக்கீடு செய்தல்
3) வருமான மறு பங்கீடு மூலம் சமூக ஏற்றத் தாழ்வுகளை குறைத்தல்
4) புதிய, சிறிய கைத்தொழில்களைப் பாதுகாத்தல்
5) கைத்தொழிலையும், ஏற்றுமதியையும் அபிவிருத்தி செய்தல்
6) வெளிநாட்டுச் செலாவணியை சிக்கனப்படுத்தல்
7) ஆடம்பர,அத்தியாவசிய மற்றும் சிலபொருள் இறக்குமதி,நுகர்வைக் கட்டுப்படுத்தல்
8) சென்மதி நிலுவைப் பாதகநிலையைக் குறைத்தல்
9) சேமிப்பு மட்டத்தைஅதிகரித்து மூலதன ஆக்கத்தை ஏற்படுத்தல்
10) பண வீக்கத்தைக் கட்டுப்படுத்தல்

## சிறந்த வரிமுறைக்கு இருக்க வேண்டிய பண்புகள்

1) இயலுமைக்கு ஏற்றவாறு வரி செலுத்தல்
2) முயற்சிகளைப் பாதிக்காமல் தூண்டுதலை ஏற்படுத்தல்
3) வரி செலுத்துவோர் இலகுவாக விளங்கிக் கொள்ளல்
4) கணக்கிட,செலுத்த இலகுவாக இருத்தல்
5) வசூலித்தல் சிக்கனமாக இருத்தல்

## வரி விதிப்புத் தத்துவங்கள்

### (1) வழக்க நீதித் தத்துவம் / நீதித் தத்துவம் ( PRINCIPLE OF JUSTICE)

ஒவ்வொருவரின் இயலுமைக்கு ஏற்ற வகையில் வரியினை அறவிடல் வேண்டும். உயர்ந்த வருமானம் சொத்துக்கள் மீது உயர்ந்த வரியினையும் குறைந்த வருமானம் சொத்துக்கள் மீது குறைந்த வரியினையும் விதிக்க வேண்டும்.

### (2) தூண்டுகோல் தத்துவம் (PRINCIPLE OF MOTIVATION)

வரிமுறை தனிப்பட்டவர்கள், நிறுவனங்களின் ஆர்வம், ஈடுபாடுகளைப் பாதிக்காமல் இருத்தல் வேண்டும். பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்காமல் சேமிப்புமூலதன ஆக்கங்களைத் தூண்டக்கூடியதாக வரிமுறை இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) சிக்கனத் தத்துவம் ( PRINCIPLE OF ECONOMICS)

வரி விதிப்பு முறைகளை நடைமுறைப்படுத்துவதற்கான செலவினங்கள் மிகவும் குறைவானதாக இருக்க வேண்டும். வரி வருமானத்தில் மிகச் சிறிய பங்காக வரி விதிப்புக்கான செலவினம் இருத்தல் வேண்டும்.

(4) எளிமைத் தத்துவம்,/நெகிழ்ச்சித்தத்துவம் ( PRINCIPLE OF SIMPLICITY)

வரி விதிப்பு முறைகளை இலகுவாக வரி செலுத்துவோர் விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும். வரி அறவிடுவோர் மட்டுமன்றி வரி செலுத்துவோரும்கணிப்பீடு செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். இலகுவான வழிகளில் அல்லது முறைகளில் செலுத்தக் கூடியதாக அமைய வேண்டும்.

## வரி விதிப்பு முறைகள்

(1) விருத்திமுறை வரி / கூடிச்செல்விகிதவரி ( PROGRESSIVE TAX)

சொத்துக்கள், வருமானங்கள் அதிகரிப்பதற்கேற்ப வரி வீதமும் அதிகரிக்குமாயின் அது விருத்தி முறைவரி எனப்படும்.

வருமான வேறுபாடு, சமூக ஏற்றத் தாழ்வுகளை குறைக்கக் கூடியதாக இருப்பினும் முயற்சி அல்லது ஈடுபாடுகளை இம்முறை பாதிக்கும். அரசாங்கத்தின் வரி வருமானம் அதிகரிக்கும்.

(2) விகித சமவரி / சமவிகித வரி ( PROPORTIONAL TAX)

சொத்துக்கள், வருமான மட்ட அதிகரிப்புக்கு ஏற்ப வரி வீதம் அதிகரிக்காத வரி முறை விகித சமவரி எனப்படும். அதாவது எல்லாச் சொத்து வருமானமட்டத்திலும் ஒரே வீதத்தில் வரி செலுத்துதல் ஆகும்.

கணிப்பதற்கு இலகுவாகவும் வசூலிப்பதற்கு சிக்கனமாகவும் வரி ஏய்ப்பு குறைவாகவும் இருக்கும். இம்முறை ஆற்றலுக்கு ஏற்றவரி விதிக்கும் கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லை.

(3) தேய்வு முறைவரி / குறைந்து செல் வரி (REGRESSIVE TAX)

வருமான மட்டம் அதிகரிக்க வரி வீதம் தொடர்ச்சியாக குறைந்து செல்லும்வரிமுறை தேய்வு முறை வரி எனப்படும்.

சொந்த ஈடுபாடு அதிகரித்து வருமானம் அதிகரிக்கும். ஆனால் வருமான,சமூக,ஏற்றத்தாழ்வு இம்முறையில் மேலும் அதிகரிக்கும் உழைப்பாளர்களுக்கு ஊக்குவிப்பாக அமையும்.

நேர்வரிகள் விருத்தி முறையிலும் நேரில் வரிகள் தேய்வு முறையிலும் பொதுவாக விதிக்கப்படுகின்றது.

(4) தொகையீட்டு வரி (QUANTITATIVE TAX)

வருமானம் எவ்வாறு அதிகரித்தாலும் ஒரு குறிப்பிட்ட தொகையினை மட்டும்வரியாக அறவிட்டால் அது தொகையீட்டு வரி எனப்படும்.

(உ+ம்) உரிமை வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பிரதான வரி வகைகள்

1) வருமானங்கள் மீதான வரிகள் (Taxes on Income)
2) ஆதனங்கள் மீதான வரிகள் (Taxes on Property)
3) உள்நாட்டுப் பண்டங்கள், பணிகள் மீதான வரிகள் (Taxes on Domestic Goods & Services)
4) சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் (Taxes on International Trade)
5) நானாவித (ஏனைய) வரிகள் (Miscellaneous Taxes )

இலங்கையின் தற்போதுள்ள வரிமுறையின் பிரதான வரிவகைகள் மேலே ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. ஆயினும் வரிகளின் இயல்பு அடிப்படையில் பின்வருமாறு இரண்டு வகைப்படுத்தப்படும்.

(1) நேர்வரி (2) நேரில்வரி

**1) நேர்வரி ( DIRECT TAX)**

வரியைச் செலுத்துபவரே வரிச் செலவைப் பொறுப்பேற்றால் அது நேர்வரி எனப்படும். வருமானம் சொத்துக்கள், உரிமைகள் மீது நேர்வரி விதிக்கப்படும் (உ+ம்) வருமான வரி

**2) நேரில்வரி ( INDIRECT TAX)**

வரியைச்செலுத்துபவர் வரிச்செலவில் ஒருபகுதியை அல்லது முழுவதையும் பிறரிடம் அறவிடமுடியுமாயின் அது நேரில் வரி எனப்படும். நேரில் வரி பொருள்கள் மீதான வரியாகும். (உ+ம்) புரள்வு வரி

கைத்தொழில், உள்நாட்டு, வெளிநாட்டு வியாபாரங்களின் போது நேரில் வரிகள் அறவிடப்படுகின்றன. வரி வருமானத்தில் நேர் வரிகள் (20%) குறைவாகவும் நேரில் வரிகள் (80%) கூடுதலாகவும் இலங்கையில் காணப்படுகின்றன.

**இலங்கையில் வரி அமைப்பில்நேர் வரியின் பங்கு குறைவாக இருப்பதற்கான காரணங்கள்;-**

1) மக்களில் பெரும்பான்மையோர் குறைந்த வருமானம் பெறுதல்
2) வரையறுத்த கம்பனிகள் குறைவாக இருத்தல்
3) சொத்துக்கள், வருமானங்கள் தொடர்பாகச்சரியான பதிவுகள் இல்லை
4) வரிச் சலுகை வரி விடுதலைகள் அதிகளவில் அனுமதிக்கப்படுதல் உ+ம்:- ஏற்றுமதிப் பதனிடல் பிரதேசம்
5) கூட்டுத்தாபனம் உட்பட அரச ஊழியர்க்கு வரி விலக்களித்தல்
6) ஊழியர்களுக்கு மேலதிகமான வரி வரவு (Tax credit) வழங்கல்
7) அரசியல் தலையீடு, அரச நிர்வாகிகளின் இலஞ்ச நடவடிக்கை காரணமாக வரி ஏய்ப்பு அதிகமாயிருத்தல்

**இலங்கையின் வரி அமைப்பில் நேரில் வரியின்பங்கு அதிகமாக இருப்பதற்கான காரணங்கள் :-**

1) இலகுவாகக் கணிப்பிட அறவிட முடிதல்.
2) பொருட்களின் விலை ஊடாக அறவிடுவதால் வரி செலுத்துவதாக உணர்வதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பெறுவதால் வரி ஏய்ப்பு மிகவும் குறைவு.
4) வரி அறவிடும் மட்டம் நெகிழ்ச்சி அற்றதாக இருத்தல் உ+ம் . சுங்கத்திணைக்களம் விற்பனை வரியையும் அறவிடல்.

## தீர்வை (DUTY)

பண்டங்கள் சேவைகள் மீது விதிக்கப்படும் வரி வகை தீர்வை எனப்படும். நாடுகளுக்கிடையிலான வியாபாரங்களுக்கு விதிக்கப்படும் வரியே தீர்வை ஆகும்.

வரி விதித்தல், விலக்குதல், திருப்பிக்கொடுத்தல் , வரிஅளவு ஆகிய விபரங்களுடன் தொகுக்கப்பட்ட பட்டியல் இறுப்பு எனப்படும். ஆனால் சில சந்தர்ப்பங்களில் தீர்வையை இறுப்பு எனவும் அழைப்பர்.

## சுங்கத்தீர்வை (CUSTOM DUTY)

சர்வதேச வர்த்தகத்திற்காக கொடுக்கல் வாங்கல் செய்யப்படும் பொருட்கள் மீது சுங்கத்திணைக்களம் அறவிடும் வரி சுங்கத்தீர்வை/வரி எனப்படும்.

எமது நாட்டு உற்பத்திகள் வெளிநாட்டவர் நுகர்வதற்காக அனுப்புகையில் ஏற்றுமதி வரியும் பிறநாட்டு உற்பத்திகள் எமது நாட்டவர் நுகர்வதற்காக பெறுகையில்இறக்குமதி வரியும் விதிக்கப்படுகின்றது. வரி வருமானத்தில் சுங்கவரி 29% ஆக உள்ளது.

பன்னாட்டு வியாபாரம் தொடர்பான வரிகளில் இறக்குமதித் தீர்வைகள் 89% ஆகவும் ஏற்றுமதித் தீர்வைகள் 11% ஆகவும் காணப்படுகின்றது. தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்கள், இரத்தினக் கற்கள் மீது ஏற்றுமதிவரி அறவிடப்படுகின்றது. ஏற்றுமதி வரி 1970 இல் 18.5% இருந்து 1991 இல் 4.5% ஆகக் குறைந்துள்ளது.

**ஏற்றுமதிவரிகளின் பங்கு படிப்படியாக குறைந்து வருவதற்கான காரணங்களாவன**

1) ஏற்றுமதி ஊக்குவிப்பு நோக்கமாக வரி விடுதலை, வரிச்சலுகை வழங்கியமை
2) ஏற்றுமதிப் பொருள் விலைகள் அதிகம் உயர்வடையாமை
3) ஏற்றுமதிப் பொருள் அளவுகள் அதிகம் அதிகரிக்காமை
4) மீள் ஏற்றுமதிகள் அதிகமாக இருக்கின்றமை

உணவு, மருந்துப் பொருள், பொறிகள், வாகனங்கள் மீது இறக்குமதி வரி அறவிடப்படுகின்றது. இறக்குமதி வரி 1971ல் 9.8%இருந்து 1991ல் 30% ஆக அதிகரித்துள்ளது.

**இறக்குமதி வரிகளின் பங்கு படிப்படியாக அதிகரித்து வருவதற்கான காரணங்களாவன**

1) தாராள வர்த்தகம் காரணமாக இறக்குமதி அளவு அதிகரித்தமை
2) இறக்குமதிப்பொருட்களின் விலை அதிகரித்தமை
3) வெளிநாட்டு வேலைவாய்ப்பால் பலருடைய வருமானம் அதிகரித்துகூடிய வரிவீதம் உடைய ஆடம்பரப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டமை
4) சுங்கவரிப் பிரமாணங்கள் கடுமையாக்கப்பட்டமை
5) சுங்க அதிகாரிகளில் சிலர் இலஞ்ச ஊழலில் பிடிபட்டமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுங்கவரி விதிப்பதற்கான காரணங்கள்

**1) வருமான நோக்கம்**

அரசநிர்வாக, சமூகநல செலவினங்களுக்கான வருமானத்தை அரசாங்கம் பெற்றுக்கொள்ளல்

**2) தடை அல்லது பாதுகாப்பு நோக்கம்**

இறக்குமதியை ஏற்றுமதி பாதிக்காவண்ணம் கட்டுப்படுத்திச் செலாவணியைச் சிக்கனப்படுத்துவதுடன் உள்நாட்டு உற்பத்தி, உற்பத்தியாளர், சேமிப்புக்களைப் பாதுகாத்தல்

## சுங்கவரி முறைகள்

**1) அலகு ரீதியான தீர்வை (UNIT RATE OF DUTY)**

பொருட்களின் கணியங்கள் அடிப்படையில் விதிக்கப்படும் தீர்வை அலகு ரீதியான வரி எனப்படும். நிறை, எண்ணிக்கை, பருமன், கனவளவு, மற்றும் அளவுக்கேற்றவாறு வரி விதிக்கப்படும்.குறித்தளவு வரி, குறித்த வீதவரி, நியமவரி (Specific duty) எனவும் இம்முறையை அழைக்கலாம். உ+ம் சேட் ஒன்றுக்கு 100/-

**2) பெறுமான வீத தீர்வை (ADVALOREM DUTY)**

பொருள்களின் பெறுமதி அடிப்படையில் விதிக்கப்படும் தீர்வை முறை பெறுமான வீதவரி எனப்படும்.பொதுவாக விலை, ஈடு, கேள்வுப் பெறுமானத்தில் விதிக்கப்படும்.

உ+ம் பசளைக்கு 2% (100/– பெறுமதியான பசளைக்கு 2/-)

வரி விதிப்புக்கு எந்தமுறை இலகுவானது எந்தமுறை கூடிய வருவாயைத் தரக்கூடியது என்பதற்கேற்ப இந்தமுறைகளில் ஒன்றை அல்லது இரண்டையும் பயன்படுத்தி தீர்வைகள் வசூலிக்கப்படும்.

**3) கலப்பு வரி/சேர்க்கை தீர்வை (COMPOSITE DUTY)**

பொருட்களின் கணியங்கள் பெறுமானங்கள் இரண்டினதும் அடிப்படையில் விதிக்கப்படும் சுங்கவரி சேர்க்கை வரி எனப்படும்.
உ+ம் சுவர் மணிக்கூட்டுக்கு 50/- அல்லது 10%ஆயின் (100 ரூபாவுக்கு 10/-)

**சுங்கம் திருப்பி எடுத்தல் (CUSTOM DRAW BACK)**

பொருட்கள் இறக்குமதியின் போதுஅறவிடப்பட்ட வரிகள் அப் பொருட்களை மீள ஏற்றுமதி செய்யும் போது சுங்கத் திணைக்களம் திருப்பிக் கொடுத்தல் சுங்கம் திருப்பிக் எடுத்தல் அல்லது **தீர்வைத் தள்ளுபடி** எனப்படும்.

அல்மரபு ஏற்றுமதிப் பொருள் உற்பத்திக்கான மூலப் பொருள், பொதிகட்டும் பொருள் தொடர்பான வரிகள் திருப்பிக் கொடுக்கப்படும். இறக்குமதி வரி, விற்பனை வரி, உள்ளூரில் கொள்வனவு செய்த பொருட்களுக்கான விற்பனைவரி ஆகியன திருப்பிக் கொடுக்கப்படும்.

ஏற்றுமதிப் பொருளின் **"கப்பல் தளம் மட்டும் இலவசம்"** (Free on board) என்ற விலையில் **"அமைச்சர்களுக்கிடையிலான குழு"** ஏற்றுமதி அபிவிருத்திக் கழகம் தீர்மானிக்கும் வீதத்தில் திருப்பிக் கொடுக்கப்படும். ஏற்றுமதி வருமானம் கிடைத்த பின் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை திறைசேரிக்கு தெரிவித்து ஏற்றுமதியாளரின் வங்கியில் கிடைக்கச் செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுங்கம் திருப்பி எடுத்தலின் பிரச்சினைகள்**

1) திறைசேரிக்கு வரியைத் திருப்பிக் கொடுக்க நிதிப்பிரச்சினை
2) நிறுவனத்திற்கு வரி செலுத்த நிதிப்பிரச்சினை
3) நிறுவனத்திற்கு மூலதன முடக்கம்
4) அரசுக்கு நிர்வாகச் செலவின் விரயம்
5) சுங்க அதிகாரிகள் மோசடிகளுக்கு இடமளித்தல்.

**தயாரிப்புவரை களஞ்சியத்திலிடும்திட்டம் (MANUFACTURE - IN BOND SCHEME)**

சுங்கம் திருப்பி எடுத்தலில் காணப்படும் நடைமுறை இடர்களைக் குறைப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய திட்டமாகும். பிரதானமாக புடவைகள் இறக்குமதிக்கு செயற்பாட்டில் உண்டு

ஏற்றுமதிப் பொருள்களுக்கான உள்ளீட்டுப் பொருட்களை இறக்குமதியின் போது வரி செலுத்தாமல் துறைமுகத்திற்கு வெளியே உற்பத்தி வரை பிணைப்படுத்திய பண்டகசாலையில் வைத்திருக்கும் முறையாகும்.

ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கு விண்ணப்பித்தால் சபை சுங்கத்திணைக்களத்திற்கு சிபார்சினை வழங்கும் இறக்குமதி மீள் ஏற்றுமதி அளவு தொடர்பாக கையிருப்புப் பராமரிப்பதன் மூலம் சுங்கக்கட்டுப்பாடு கையாளப்படுகின்றது.

**மாற்றத்தக்க வரி வரவுத் திட்டம் ( T. T. C. S ) (TRANSFERABLE TAX CREDIT SCHEME)**

ஏற்றுமதியாளருக்கு வழங்கப்படும் வரிச்சலுகை, வரி விடுதலை நன்கொடைகளுக்குப் பதிலாக பணப்பெறுமதியுடையதாக வழங்கப்படும் வருமானச் சான்றிதழ்கள் மாற்றத்தக்க வரி வரவுத் திட்டம் எனப்படும். ஏற்றுமதியாளர் விருப்பப்படி செயல்படுத்தப்படும். பிற நாட்டு இறக்குமதியாளருக்கும் மாற்றக் கூடிய சான்றிதழ் ஆகும். ஏற்றுமதி நிறுவனத்தின் வருமானமாகக் காணப்பட்டு வரி விதிக்கத்தக்க வருமானமாக கருதப்படும்.

ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஏற்கனவே உள்ள ஏற்றுமதி ஊக்குவிப்புக்களின் குறைபாடுகளை நீக்க 1988 இன் வரவு செலவுத்திட்டத்தில் அறிமுகப்படுத்திய திட்டமாகும்.

**ஜனாதிபதி தீர்வை ஆணைக்குழு (PRESIDENTIAL TARIFF COMMISSION)**

சுங்கவரி நடைமுறைகளை பொருளாதார அபிவிருத்தி, பொது மக்களின் நலன் என்பவற்றைக் கவனத்தில் கொண்டு நிர்வகிப்பதற்கான ஜனாதிபதியைத் தலைவராகக் கொண்ட அமைப்பாகும்.

வரிவிதிப்பை மேற்பார்வை செய்தல், வரி நிர்ணயித்தல், வரி மாற்றங்களை மேற்கொள்ள முறைப்பாடுகளை ஏற்றுப் பரிசீலனை செய்ததன் பின் சிபார்சு செய்தல் என்பன இக்குழுவின் பிரதான தொழில்பாடுகளாகும்.

**தீர்வை ஆணைக்குழுவின் சிபார்சில் செய்யப்பட்ட மாற்றங்கள் .**

1) நுகர்வுப் பொருட்களின் வரிகள் முற்றாக நீக்கப்பட்டமை
உ+ம் : மருந்துப் பொருட்கள், குழந்தைகள் பால்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) நுகர்வுப் பொருட்களின் வரிகள் உள்ளூர் உற்பத்தியைப் பாதுகாக்க உயர்த்தப்பட்டன உ+ம் : சீனி, பால்மா
3) முதலீட்டுப்பொருட்களுக்கான வரிகள் கணிசமான அளவு குறைக்கப்பட்டமை உ+ம் : வாகனங்கள், பொறிகள்
4) இடைநிலைப் பொருட்களின் வரிகள் நீக்கப்பட்டமை உ+ம் : சீமெந்து, பசளை, இரசாயனப் பொருட்கள்
5) இடைநிலைப் பொருட்களின் வரிகள் அதிகரிக்கப்பட்டமை உ+ம்: கோதுமை
6) ஏற்றுமதிப் பொருட்களின் வரிகள் நீக்கப்பட்டமை உ+ம்: கடலுணவுகள், சிறு விவசாய ஏற்றுமதிப் பொருட்கள்.

**சுங்கச் சங்கம்** (CUSTOMS UNION)

சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடும் குறிப்பிட்ட நாடுகள் இணைந்து தீர்வை முறையை இலகுவாக்க, நீக்க உருவாக்கும் அமைப்பு சுங்கச் சங்கம் எனப்படும். சுங்கவரிகளை நிர்ணயிக்க, நீக்க, சலுகை வழங்க தொடர்புபட்ட நாடுகள் சுங்கச் சங்கத்தை அமைக்கின்றன உ+ம்: ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம், சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடும் சகல நாடுகளும் இணைந்த அமைப்பு சுங்கக் கூட்டுச்சபை (CUSTOMS CORPORATION COUNCIL)

**பிறசல்ஸ் இறை பெயர் நிர்ணயம்** ( B.T.N )
( BRUSSELS TARIFF NOMENCLATURE )

சர்வதேச ரீதியாக கொடுக்கல் வாங்கல்களுக்கு கையாளப்படும் சகல பொருட்களையும் ஒழுங்குபடுத்தி அட்டவணைப்படுத்தி இலக்கமிடப்பட்ட பட்டியல் ஆகும்.

பொருட்களை திட்டவட்டமான பெயர் அடிப்படையில் அடையாளம் கண்டு தீர்வை விதிக்க, விலக்க, சலுகை வழங்க இப்பட்டியல் பயன்படும்.

பொருட்களின் பொதி, வர்த்தக ஆவணங்களில் இவ் இலக்கங்கள் இடப்படுகின்றது. பட்டியலின் புதிய பெயர்
(CUSTOMS CORPORATION COUNCIL NOMENCLATURE) (C .C. C.N)

**சுங்கத் திணைக்களம்.** (DEPARTMENT OF CUSTOMS)

சுங்கவரி முறை நிர்வாகங்களுக்கான அரசின் முகவர் அமைப்பே சுங்கத் திணைக்களம் ஆகும். சுங்கவரிகளை மட்டுமன்றி விற்பனை வரியையும் அறவிடுகின்றது. துறைமுக, விமானத் தளங்கள், கடற் பிராந்தியங்கள் உட்பட தீர்வை நிர்வாகங்களை கையாளுகின்றது.

**தொழில்பாடுகள்**

1) பயணிகள், பொருள்கள் என்பவற்றை பரிசோதித்தல்
2) சட்ட விரோத பொருள் கையாளலைத் தடுத்தல் .
3) சட்ட விரோத பொருட்களை பறித்து வைத்திருந்து ஏலத்தில் விற்றல்
4) வரிப்பட்டியல் , வரிவிடுதலை, வரிச்சலுகைகளைக் கவனித்து வரியை தீர்மானித்து அறவிடல்.
5) சர்வதேச வர்த்தக தரவுகளை சேகரித்து சுங்கப் பதிவேடுகளைப் பராமரித்தல்.
6) களஞ்சிய வசதிகளை வழங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுங்க அறிக்கைகள் சுங்கப்பதிவேடுகள்

சுங்கத்திணைக்களத்தின் பதிவேடுகள் ஆவணங்களின் தகவல்களின் தொகுப்பு சுங்க அறிக்கைகள் எனப்படும். அரசாங்கம், பொதுமக்கள், பொருளாதாரம், என்பவற்றுக்கு இவ் அறிக்கைகள் பயன்படுகின்றது. தீர்வை முறை, இறக்குமதி, செலாவணிக்கட்டுப்பாட்டுக் கொள்கைகளை வரையறுக்க, தீர்வை வருமானங்களைத் திட்டமிட தகவல் தரும் மூலமாக அமைகின்றது.

## மொத்த விற்பனைவரி ( TURN OVER TAX )

நிறுவனங்களின் விற்பனை வருமானங்களின் மீது விதிக்கப்படும் வரி புரள்வுவரி எனப்படும். காலாண்டு விற்பனை 25,000/= க்கு மேற்பட்ட விற்பனையுடைய நிறுவனங்கள் புரள்வு வரியை செலுத்த வேண்டும்.

வரிவீதங்கள் பொருள் வகைக்கேற்ப வேறுபடும். இலங்கையில் 5, 10, 15, 20 என்ற வீதப்படி விதிக்கப்படுகின்றன. விற்பனை அளவுக்கு தாமே வரியைக் கணித்து இறைவரித் திணைக்களத்தில் நேரடியாகச் செலுத்தலாம். அல்லது வங்கியில் செலுத்தி கைச்சாத்தின் ( Voucher ) பிரதியொன்றை திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கலாம்.

அரசவரி வருமானத்தில் நேரில் வரியின் பங்கு 81.3% ஆகவும் நேரில் வரியில் உள்நாட்டு பொருட்கள் சேவைகள் மீதான வரிகள் 58% ஆகவும் உள்நாட்டுப் பொருட்கள் சேவைகள் மீதான வரியில் புரள்வு வரிகள் 55.1% ஆகவும் உள்ளது.

## தேர்ந்த விற்பனை வரி ( SELECTIVE SALES TAX ) ( S. S. T)

தேர்ந்தெடுக்கப்பட்ட சில பொருட்களின் விற்பனை வருமானங்களின் மீது விதிக்கின்ற வரி தேர்ந்த விற்பனை வரி எனப்படும்.

உ+ம்: தேயிலை, புகையிலை, மதுபானம் பந்தய வரிகள்

## விற்பனை வரிக்கான திருத்தம்

1) விற்பனையாகக் கருதப்பட்டு வரி செலுத்தப்பட்ட தொகையில் அறவிட முடியாக்கடன் ஏற்பட்டால் பின்னர் வரி செலுத்தும்போது கழித்தல்.
2) இலங்கைக்கு வெளியே உற்பத்தி செய்யப்படும் எப்பொருளையும் இறக்குமதி செய்யும் எவரும் சுங்கத் தீர்வைக்கு புறம்பாக புரள்வு வரி செலுத்த வேண்டும். விற்பனையின் பின் வரியை கணித்து செலுத்தப்பட்ட வரியைக் கழித்து மீதி வரியைச் செலுத்தலாம்.

## புரள்வு வரி மீள எடுத்தல் ( TURN OVER TAX DRAW BACK )

உள்நாட்டு விற்பனைக்கான பொருட்கள் ஏற்றுமதி செய்கையில் அறவிடப்பட்ட மொத்த விற்பனை வரியைத் திருப்பிக் கொடுத்தல் புரள்வுவரி மீள எடுத்தல் எனப்படும். இறக்குமதியின் போது புரள்வுவரி செலுத்தப்பட்ட பொருள், மூலப் பொருள்களை உள்ளூரில் கொள்வனவு செய்கையில் அறவிட்ட புரள்வு வரி என்பன மீளப் பெற்றுக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்நாட்டு உற்பத்திவரி/ கலால் தீர்வை (EXCISE DUTY)

உள்நாட்டு வளங்களைக் கொண்டு அந்நாட்டு நுகர்வுக்காக உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மீது விதிக்கப்படும் வரி உள்நாட்டு உற்பத்தி வரி எனப்படும். உ+ம் மதுபானவரி, புகையிலைவரி பெரும்பாலான வரிகளை **கலால் திணைக்களம்** திரட்டுகின்றது. மொத்த வரிவருமானத்தில் 15.5% கலால் வரி மூலமாகத் திரட்டப்படுகின்றது.

## உள்நாட்டு உற்பத்திவரி திருப்பி எடுத்தல் (EXCISE DUTY DRAW BACK)

நுகர்வுக்கு உபயோகிக்கும் உள்நாட்டு உற்பத்திப் பொருட்கள் வரி செலுத்தப்பட்டுப் பின்னர் ஏற்றுமதி செய்யப்படும்போது அறவிட்ட வரியை திருப்பிக் கொடுத்தல் உள்நாட்டு உற்பத்தி வரி திருப்பிக் கொடுத்தல் எனப்படும்.

## வருமானவரி (INCOME TAX)

தனியாட்கள், ஆட்களின் குழுக்கள் தனித்தன்மையுள்ள (கூட்டு) நிறுவனங்களின் குறிப்பிட்ட தொகைக்கு மேற்பட்ட ஆண்டு வருமானத்தின் மீது விதிக்கப்படும் வரி வருமானவரி எனப்படும்.

தனியுடமை, பங்குடமை நிறுவனங்கள் சட்ட ஆளுமை அற்றவையாக இருப்பதால் வருமானவரி செலுத்த வேண்டியதில்லை. ஆனால் இந்நிறுவனங்களின் இலாபங்கள் தொடர்பாக உரிமையாளர் அல்லது பங்காளர் வருமானவரி செலுத்த நேரிடலாம். தனிப்பட்ட தனியாள் செலுத்தும் வரிகள் தனியாள் வருமானவரி எனவும் சட்ட ஆளுமையுள்ள கம்பனி போன்றவற்றின் வருமானவரி **கூட்டு வரிகள்** எனவும் வருமானவரி வேறுபடும்.

வரையறுத்த புதிய அல்லது ஏற்றுமதி நோக்கமான கம்பனிகளில் வரிவிடுதலை அளிக்கப்பட்ட கம்பனிகள் குறிப்பிட்ட வருடம் வரை வரி செலுத்த வேண்டியதில்லை. இதனை **வரி விடுதலை** (Tax Holiday ) எனப்படும். பின் மேலும் குறிப்பிட்ட வருடங்களுக்கு நியமவரிவீதத்திலும் குறைந்த வீதத்தில் வரி செலுத்தலாம். இதனை **வரிச்சலுகை** (Tax Concession) எனப்படும். வரி செலுத்துபவரால் அறநிலையங்களுக்கும் அரசாங்கத்திற்கும் செய்யப்படும் நன்கொடைகள் **தகமைக்கொடுப்பனவுகள்** (Qualifying Payments) எனப்படும். வரி விடுதலை, வரிச்சலுகை, தகமைக் கொடுப்பனவுகள் என்பவற்றை உள்ளடக்கி **வரி ஊக்குவிப்புக்கள்** (Tax Incentives) எனவும் அழைக்கப்படும்.

வதிவுள்ள கம்பனிகள் வதிவற்ற கம்பனிகள் 45% வரியைச்செலுத்த மக்கள் கம்பனி, விலை கூறப்பட்ட கம்பனிகள் சலுகைகளுடன் ஆகக்கூடுதலாக 40% வரையே வரி செலுத்துகின்றன. அத்துடன் சிறு கம்பனிகள்வரி விதி வருமான வேறுபாட்டுக்கு ஏற்ப குறைந்த வீதஅளவு வரியையே செலுத்துகின்றன.

வருட வருவாயில் 42,000/= மேற்பட்ட வருமானத்திற்கு வருமானவரி செலுத்த வேண்டும். ஊழிய வருமானமாயின் 1991/ 1992 வரி ஆண்டுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60,000 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானத்தின் மீது வரி செலுத்த வேண்டும். வரி தொடர்பாக ஊழியர்களுக்கு அனுமதிக்கப்படும் வ்ரி அறவிடப்படு தற்குரிய தள்ளுபடி **வரிவிடுதொகை** (Tax credi t) எனப்படும். 1992/ 1993 வரி ஆண்டுக்கான இவ்வரி விடுதொகை மாதம் 1800/= ஆகும். வருமானவரி ஆண்டு சித்திரை 01 இல் ஆரம்பித்து அடுத்த ஆண்டு பங்குனி 31 இல் முடிவடைகின்றது. உதாரணமாக வருமானவரி ஆண்டு 1991/ 1992 என்று குறித்த ஆண்டு 1991 சித்திரை 1 இல் இருந்து 1992 பங்குனி 31 வரையான 12 மாதத்தைக் கொண்டதாகும்.

இலங்கையிலும் இலங்கைக்கு வெளியிலும் எழுகின்ற வருமானங்களில் வரிக்குட்படுகின்ற வருமானத்தின் மீது 10, 20, 30, 35 வீதம் என்ற விருத்தி முறையில் வரி விதிக்கப்படுகின்றது. நேர்வரிகளில் வருமானவரி 65% ஆகவும் மொத்த வரி வருமானத்தில் 13% ஆகவும் உள்ளது.

## நியதிச் சட்ட வருமானம் (STATUATORY INCOME)

குறிக்கப்பட்ட கால அல்லது நிதியாண்டு தொடர்பாக வரி விதிப்புக்குட்படக்கூடிய மதிப்பிடப்பட்ட வருமானம் நியதிச்சட்ட வருமானம் எனப்படும். (உ+ம்) வருடம் 42000 ரூபாவுக்கு மேற்பட்டவருமானம்

## வரி மதிப்பிடற்குரிய வருமானம் (ASSESSABLE INCOME)

நியதிச் சட்ட வருமானத்திலிருந்து அங்கீகரிக்கப்பட்ட கழிவுகள் நீக்கிய பின் உள்ள வருமானம் வரி மதிப்பிடற்குரிய வருமானம் எனப்படும். (உ+ம்) வருட 60000ரூபா வருமானமாயின் வரி விலக்கு 42000 ரூபா நீக்கி 18000 ரூபா வரி மதிப்பிடற்குரிய வருமானம்

## வரி அறவிடுவதற்குரிய வருமானம் (TAXABLE INCOME)

வரி மதிப்பிற்குரிய வருமானங்களில் இருந்து வரி விலக்குள்ள தொகை ஏற்றுக் கொள்ளப்பட்ட தகமைக் கொடுப்பனவுகள் தொடர்பான விடுதொகை என்பவை கழித்த பின் உள்ள வருமானம் வரி அறவிடுதற்குரிய வருமானம் எனப்படும்

## வரி விடு தொகை/ வரி வரவு (TAX CREDIT)

வரி செலுத்துபவருக்கு சாதாரண வரி விலக்குத் தொகையுடன் மேலதிகமாக அனுமதிக்கப்படும் வரி விலக்குத் தொகை வரிவிடு தொகை எனப்படும். உதாரணமாக முன்னர் சில பங்குதாரருக்கு பங்கிலாப வரிக்கு மேலதிகமாக அனுமதித்த 10000 ரூபா. தற்போது ஊழிய வருமானத்திற்கு வருமான வரிக்கு மாதம்அனுமதிக்கும் 1800ரூபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வதிவற்றவர் NON - RESIDENT

வரி மதிப்பீட்டாண்டில் இலங்கையில் வதியாத தனியாளொருவர் அல்லது தற்காலிகமாக வதிபவரை வதிவற்றவராக வரி விதிப்பு நோக்கமாக வரையறுக்கப்படும் .வருமானங்கள் ஆண்டொன்றுக்கு 1000ரூபாவுக்கு அதிகமானதாயின் வருமானவரி விதிப்புக்குட்படும்.

## ஆட்கள் குழு (BODY OF PERSONS)

ஆங்கீகரிக்கப்பட்ட (வர்த்தமானி அறிவித்தல்) தரும் ஸ்தாபனங்கள். சங்கங்கள். நிதியங்கள் ஆகியன ஆட்கள் குழு எனப்படும். இவை குறைந்த வேறுபட்ட வீதங்களில் வரி விதிப்புக்கு உட்படுகின்றன.

## வரி தவிர்ப்பு (TAX AVOIDANCE)

வரி செலுத்த வேண்டியவர் ஆய்வுகள் மூலம் உத்திகளைக் கையாண்டு வரி மதிப்பிடுதற்குரிய வருமானங்களைக் குறைத்தல் வரி தவிர்ப்பு எனப்படும். உதாரணமாக கூடியளவுக்கு ஆயுள் உறுதிகளை பெற்றுக் கொள்ளல் மூலம் தகமைக் கொடுப்பனவுகளை அதிகரித்தல்

## வரி ஏய்ப்புகள் (TAX EVASIONS)

தொழில்களின் நியதிச் சட்ட வருமானங்களை வெளிப்படுத்தாமை அல்லது குறைத்து வெளிப்படுத்தல் செலவினங்களை மிகைப்படுத்தி வெளிப்படுத்தல் மூலம் வரி மதிப்பிடுதற்குரிய வருமானங்களை குறைத்து வெளிப்படுதுதல் வரி ஏய்ப்பு எனப்படும்.

## வரி மன்னிப்புகள் (TAX AMNESTIES)

வரி மதிப்பக்குட்பட்டு வரி அறவிட வேண்டிய வருமானங்களுக்கு வரி அறவிட மாட்டாது என சட்டப்படி பிரகடனம் செய்தல் வரி மன்னிப்பு எனப்படும். நியதிச் சட்ட வருமானமல்லாத வருமானம் அல்லது வரி மதிப்பிடற்குரிய வருமானமாக வெளிப்படுத்தாமை அல்லது வரி மதிப்பிடற்குரிய வருமானத்தைக் குறைத்துக் காட்டியமையால் எழுந்த கறுப்புப்பணம் பொருளாதாரத்தில் ஈடுபடுத்தச் செய்வதற்கான தூண்டுகோலாக வரி மன்னிப்பு வழங்கப்படலாம். உ+ம் திறைசேரிச் சான்றிதழ் வைப்புச் சான்றிதழ் வைப்பாளருக்கு வழங்கியமை

## வரிச்சுமை (TAX BURDEN)

தனியாள் அல்லது கூட்டு நிறவனம் செலுத்த வேண்டிய வரிக்கான பங்களிப்பு அல்லது பொறுப்பு வரிச்சுமை எனப்படும். நேர்வரியில் வரிச்சுமை முழுமையாக செலுத்துபவரால் ஏற்கப்படும். நேரில் வரியில் முழுவதும் அல்லது பகுதியை பிறர் மீது சுமத்தலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலதிக கொடுப்பனவு/ தண்டம் (SURCHARGE / PENALTY)

குறித்த விசேட காலங்களில் வழமையான வரி விதிப்புக்கு மேலதிகமான ஒரு தொகை வரி அறவிடப்படுதல் மேலதிகக் கொடுப்பனவு எனப்படும். நியம காலங்களுக்குள் வரியைச் செலுத்த வேண்டும்தாமதங்களுக்கு செலுத்தும் குற்றப்பணம் தண்டம் எனப்படும்.

வருமான வரியின் பங்களிப்பு வீழ்ச்சியடைந்து வருவதற்கான காரணங்கள்

1) அரச கூட்டுத்தாபன ஊழியர்க்கு வரிவிலக்களிக்கப்படல் .
2) புதிய முதலீடுகளை ஊக்குவிக்க வரிச்சலுகை, வரிவிடுதலைஅளித்தல்
3) வரி வீதம் குறைக்கப்பட்டமை (70% இலிருந்து 35%)
4) தனிப்பட்டவர்களின் சட்டரீதியற்ற உழைப்புக்கள் அதிகரித்தல் .
5) அரசியல் தலையீடு, ஆண்டு விபரத்திரட்டுச் (ANNUAL RETURN) சமர்ப்பிப்பதை கடுமையாக்காமை.

## முற்பண கம்பனி வரி (ADVANCE COMPANY TAX)

வதிவுள்ள கம்பனி ஒவ்வொன்றும் 1988/ 1989 இலிருந்து கம்பனியால் செய்யப்பட்ட "தகமையளிக்கும் பகிர்ந்தளிப்பு" ஒவ்வொன்றினதும் தொகைக்கு குறித்துரைக்கப்பட்ட வீதத்தில் **முற்பணக்கம்பனி** வரியைச் செலுத்தல் வேண்டும். இங்கு தகைமையளிக்கும் பங்களிப்பு என்பது பங்குதாரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் ஏதேனும் பங்கிலாபத்தில் முழுமைப்பகுதி அல்லது ஒருபகுதி எனப்பொருள்படும். முற்பணக் கம்பனிவரி வீதமானது சிறிய கம்பனிகளுக்கு 25% ஆகவும் விலை கோரப்பட்ட பொதுக்கம்பனிகளுக்கும் 33.1/3% வீதமாகவும் ஏனைய வதிவுள்ள கம்பனிகளுக்கு 50% வீதமாகவும் விதிக்கப்படுகின்றன.

## உள்நாட்டு இறைவரித்திணைக்களம் (DEPARTMENT OF INLAND REVENUE)

வருமானவரித் திணைக்களம் என்ற பெயரில் 1932 இல் ஆரம்பிக்கப்பட்ட இத்திணைக்களம் 1958 இல் பல வரிகளை ஒன்றிணைத்து உள்நாட்டு இறைவரித்திணைக்களமாகத் தோற்றம் பெற்றது. தற்பொழுது வருமானவரி, மொத்தவிற்பனைவரி, முத்திரைத்தீர்வை, பந்தய சூதாட்ட விதிப்பனவு அகியவற்றுடன் முன்னர் நடைமுறையிலிருந்து இப்போது இல்லாதொழிக்கப்பட்ட நன்கொடைவரி, மரணச்சொத்துவரி, மூலதனவிதிப்பனவு, செல்வவரி ஆகியவரிகளையும் நிர்வகித்துவருகின்றது .

**இத்திணைக்களத்தின் நோக்கங்களாவன :-**

1) சட்டத்தின் கீழ் செலுத்தப்படவேண்டிய வரிகளை சுயவிருப்போடு செலுத்துதலை ஊக்குவிப்பதன் மூலம், வரி செலுத்துதலைத் தவிர்த்தல்,, பின்வாங்குதல் என்பவற்றைத் தவிர்த்தல் மூலமாகவும் சேகரித்தலாகும்.
2) வரியையும், அது தொடர்பான சட்டவாக்கங்களையும் நியாயமாகவும், சீராகவும், பண்பாகவும் நடைமுறைப்படுத்துதல் மூலமாக வரி முறையின் நேர்மை, செயற்றிறன் ஆகியவற்றில் பொதுமக்களின் நம்பிக்கையைப் பேணுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்த அரசாங்க வருவாயில் ஏறத்தாள 50 சத வீதத்தை வரி மூலமாகத் திரட்டிக் கொடுக்கும் இத்திணைக்களம் 1994 இலிருந்து மொத்த விற்பனைவரிக்குப் பதிலாக பெறுமதி சேர்க்கப்பட்ட வரியினை (V. A. T) அறிமுகம் செய்ய உள்ளது.

**அண்மை ஆண்டுகளில் இலங்கையின் வரி முறையில் ஏற்படுத்தப்பட்ட பிரதான மாற்றங்கள்**

1) தனிப்பட்டவர் மீதான வருமானவரி தொடர்பாக வரி விடு தொகை 27,000/- ரூபாவிலிருந்து 42,000/- ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. மேலும் வருமானவரி எல்லைவீதம் 40% இலிருந்து 35% ஆகக் குறைக்கப்பட்டது. தொழில் வருமான வரி வரவாக (Tax Credit) 1800/- ரூபா அனுமதிக்கப்படும்.
2) கம்பனி வரி 50%இலிருந்து 40% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.
3) தகமைக் கொடுப்பனவுகள் தொடர்பாக அரசுக்கான நன்கொடை, அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியங்கள், அங்கீகரிக்கப்பட்ட கம்பனிப் பங்குக் கொள்வனவுகள், வீடமைப்புத்துறை முதலீடுகள், அறநிலையங்களுக்கான நன்கொடைகள் தவிர ஏனையவை நீக்கப்பட்டுள்ளன.
4) வட்டி வருமானம் மீதான நிறுத்தி வைத்தல் வரி 20% இலிருந்து 15% ஆகக் குறைக்கப்பட்டது.
5) நாணயக் கடிதங்கள் மீதான முத்திரைத் தீர்வை 2.5% இலிருந்து 2% ஆகக் குறைக்கப்பட்டது.
6) உற்பத்தியாளர், இறக்குமதியாளர் மீது 1.1.92 தொடக்கம் 1% பாதுகாப்பு தீர்ப்பனவாக அறவிடப்படும். ஆனால் பின்னர் இது 3% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.
7) சுங்கத்தீர்வை 10, 20, 35, 50 சதவீதங்களைக் கொண்ட நான்கு மட்ட வரியிறுப்பு முறையாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
8) தேயிலை மீதான ஏற்றுமதியில் பெறுமானவரி வீதம் 50% இலிருந்து 40%ஆகக் குறைப்பு. இதே போன்று தேங்காய் எண்ணை, கொப்பரா என்பவற்றுக்கும் குறைக்கப்பட்டுள்ளன.
9) 1.4.92 முதல் செல்வவரி இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.
10) 1994 இலிருந்து மொத்தவிற்பனைவரி பெறுமானம் சேர்க்கப்பட்ட வரியாக மாற்றியமைக்கப்படும்

**கம்பனிகள் தொடர்பான வரிவிதிப்பின் வரி மதிப்பாண்டு 1988 / 1989 ஏற்பட்டுள்ள மாற்றங்கள்?**

மரபு ரீதியான வரிமுறை (TRADITIONAL TAX SYSTEM)

கம்பனியின் வரிவிதி வருமானத்திலிருந்து கம்பனிகளும் வரி கழித்த எஞ்சிய தொகையிலிருந்து பகிர்ந்தளிக்கப்படும் பங்கு இலாபத்திற்கு பங்குதாரரும் வரி செலுத்துகின்ற முறை மரபுரீதியான வரி முறை ஆகும். 87/88 வரியாண்டு வரை இலங்கையிலும் இம்முறையிலேயே வரி விதிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்டுதல் முறை (IMPUTATION SYSTEM)

பங்குதாரர் பங்கு இலாபத்தினை தனது வருமானமாக காட்டி வரி செலுத்தும்போது பங்கு இலாபத் தொகையின் அளவிற்குரிய கம்பனியால் செலுத்திய வரி, பங்குதாரர் செலுத்தியவரி போன்று கருதப்படுதலே சாட்டுதல் முறை எனப்படும். அதாவது கம்பனி செலுத்திய வரியை பங்குதாரர் செலுத்தவேண்டியதற்கு சாட்டுதல் ஆகும்.

**சாட்டுதல் முறை இரண்டு வகைப்படும் .**

1) முழுச் சாட்டுதல் முறை (FULL IMPUTATION SYSTEM)
2) அரைச்சாட்டுதல் முறை (HALF IMPUTATION SYSTEM)

பங்கு இலாபம் தொடர்பாக கம்பனி செலுத்திய முழு வரியையும் பங்குதாரருக்கு சாட்டுதல் செய்வதை முழுச்சாட்டுதல் முறை எனப்படும் கம்பனி செலுத்திய வரியில் அரைவாசித் தொகையே பங்குதாரருக்கு சாட்டுதல் செய்வதை அரைச்சாட்டுதல் முறை எனப்படும். இலங்கையில் நடைமுறையில் உள்ளது அரைச்சாட்டுதல் முறையாகும்.

**மரபு ரீதியான முறை**

| | விலைகூறப்படாத கம்பனி | | விலைகூறப்பட்ட கம்பனி | |
|---|---|---|---|---|
| வரிவிதி வருமானம் | | 100000 | | 100000 |
| வரி | (50%)A | 50000 | (40%)A | 40000 |
| மிகுதி வருமானம் | | 50000 | | 60000 |
| பங்குதாரர் செலுத்த வேண்டியவரி | (40%)B | 20000 | B | 24000 |
| செலுத்த வேண்டிய மொத்தவரி | A+B | 70000 | | 64000 |

**முழுச்சாட்டுதல் முறை**

| | | | | |
|---|---|---|---|---|
| வரி விதி வருமானம் | | 100000 | | 100000 |
| வரி | (50%) | 50000 | (40%) | 40000 |
| மிகுதி வருமானம் | | 50000 | | 60000 |
| பங்குதாரரின் வருமானம் | | | | |
| மிகுதி வருமானம் | | 50000 | | 60000 |
| கம்பனி செலுத்திய வரி | | 50000 | | 40000 |
| மொத்தவருமானம் | | 100000 | | 100000 |
| பங்குதாரர் செலுத்த வேண்டிய வரி 40% | | 40000 | | 40000 |
| கம்பனி செலுத்திய வரி | | 50000 | | 40000 |
| | மீளளிப்பு | 10000 | | இல்லை |

ஆகவே 100000 ரூபா வரி விதி வருமானத்தில் செலுத்த வேண்டிய வரி 40000 ரூபாவாகையால் முழுச்சாட்டுதல் முறையில் எல்லா விதமான அமைப்புகளிலிருந்து பெறும் வருமானத்திற்கும் ஒரே அளவான வரியே செலுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரைச்சாட்டுதல் முறை**

| | | | | |
|---|---|---|---|---|
| வரிவிதி வருமானம் | | 100000 | | 100000 |
| வருமான வரி | (50%)A | 50000 | (40%)A | 40000 |
| மிகுதி வருமானம் | | 50000 | | 60000 |
| **பங்குதாரரின் வருமானம்** | | | | |
| மிகுதி வருமானம் | | 50000 | | 60000 |
| கம்பனி செலுத்தியவரியில் அரைவாசித் தொகை | | 25000 | | 20000 |
| மொத்த வருமானம் | | 75000 | | 80000 |
| பங்குதாரர் செலுத்தவேண்டிய வரி 40% | | 30000 | | 32000 |
| கழி கம்பனி செலுத்திய அரைவாசி வரி | | 25000 | | 20000 |
| செலுத்த வேண்டிய மிகுதி வரி | B | 5000 | B | 12000 |
| ஆகவே வரிவிதி வருமானம் 100000க்கு | | | | |
| செலுத்த வேண்டிய வரி | (A+B) | 55000 | | 52000 |

## உழைக்கும் போது செலுத்தும் திட்டம் (P.A.Y.E) (PAY AS YOU EARN)

மாதாந்தச் சம்பளம் பெறும் தனியார்/அரச நிறுவனங்களின் தொழிலாளர்கள் வருடமுடிவில் தொகையாக வரி செலுத்துவதற்குப் பதிலாக அண்ணளவாக மாதாந்தம் செலுத்தும் முறை உழைக்கும் போது செலுத்தும் திட்டம் என அழைக்கப்படும். வருட முடிவில் வரி மதிப்பிடப்பட்டு நிலுவை இருப்பின் பின்னர் செலுத்தப்படும். இலகுவாக வரியைச் செலுத்திமுடிக்க இம்முறை வசதியளிக்கின்றது. 5000 ரூபாவுக்கு மேற்பட்ட மாத சம்பளம் பெறுவோருக்கானது.

## வரி சமப்படுத்தும் நிதிக்கணக்கு (TAX EQUALIZATION ACCOUNT)

கம்பனிகள் போன்றன கூட்டுவரியினை (CORPORATE TAX) குறித்த ஒரு ஆண்டு வருமானத்திற்கு அடுத்த நிதியாண்டிலே செலுத்துகின்றன. நடப்பு ஆண்டு முடிவுக் கணக்கில் வரிக்காக ஏற்பாடுசெய்து வரிமதிப்பீட்டின் பின் அடுத்த ஆண்டில் வரியைச் செலுத்துகின்றன. சில நிறுவனங்கள் ஏற்பாடுகளை விசேட கணக்கில் செலவு வைத்துப் பராமரித்து வரியைச் செலுத்துகையில் வரவு வைக்கின்றன. இவ்விசேட கணக்கு வரி சமப்படுத்தும் நிதிக் கணக்கு என அழைக்கப்படும்.

## வரி ஒதுக்குச் சான்றிதழ் (TAX RESERVE CERTIFICATE)

வருமான வரிக்கான ஏற்பாட்டு நிதியை வரி செலுத்தும் வரை வட்டி வருவாயுடன் பாதுகாப்பாக முதலீடு செய்யக்கூடிய கருவி வரி ஒதுக்குச் சான்றிதழ் எனப்படும். அரசின் சார்பில் மத்திய வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களம் வழங்குகின்றது.

சான்றிதழை வரி செலுத்த இறைவரித் திணைக்களத்தில் சமர்ப்பிக்க முடிவதுடன் வட்டியுடன் காசாக்கவும் முடியும். செல்வ வரி, கொடை வரி, செலுத்தும் நோக்கமாகவும் பயன்படுத்தலாம். பணச் சந்தைக் கருவியாக இருப்பதால் முதலீட்டு வட்டி வருவாய் வரிச்சலுகையுடையதாக அமைகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பங்கிலாப வரி** (DIVIDEND TAX)

கம்பனிகளினால் பங்குதாரர்களுக்கு வழங்கப்படும் பங்கிலாபங்களின் மீது விதிக்கப்படும் வரி பங்கிலாபவரி எனப்படும். பங்கிலாப வரியை பங்குதாரர்களுக்காக கம்பனிகள் கணித்து இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புகின்றன. வரி வீதம் 15% ஆகும். பிரேரித்த பங்கிலாபங்களில்பங்கிலாப வரியை கணித்துக் கழித்துக் கொண்டு மிகுதியைப் பங்குதாரர்களுக்கு தேறியபங்கிலாபமாக கம்பனிகள் வழங்குகின்றன.

**பங்கிலாப வரிக்கழிவு / பங்கிலாபவரி மீளளித்தல்** (DIVIDEND DRAW BACK)

வருமான மட்டம் குறைந்த அதாவது வருமானவரி செலுத்தாத பங்குதாரரிடம் அறவிட்ட பங்கிலாப வரியை முறையீடு செய்த பங்குதாரர்களுக்கு இறைவரித் திணைக்களம் திருப்பிக் கொடுத்தலை பங்கிலாப வரி மீளளித்தல் எனப்படும். பங்குதாரர் படிவம் ஒன்றைப் பூரணப்படுத்திச் சமர்ப்பித்து விண்ணப்பம் செய்து (வரித்தள்ளுபடி) வரிக்கழிவினைப் பெறலாம்.

**இலங்கையின் வரிக்கட்டமைப்பு (1991)**

| | வரிவகை | மொத்த வரி வருமானத்தின்% | மொத்த அரசாங்க வருமானத்தின்% | மொத்த உள்நாட்டு உற்பத்தியின்% |
|---|---|---|---|---|
| 1 | வருமானவரி | 14.3 | 12.8 | 02.6 |
| 2 | மத்தியவங்கி வசமுள்ள திறைசேரி உண்டியல்கள் மீதான வரிகள் | 04.5 | 04.0 | 00.8 |
| 3 | சொத்துக்கள்மீதானவரிகள் | 05.2 | 04.6 | 00.9 |
| 4 | உள்நாட்டுப் பொருட்கள் பணிகள் மீதானவரிகள் | 47.1 | 42.1 | 08.6 |
| | 4.1 மொத்தவிற்பனைவரியும் பொதுவிற்பனைவரியும் | 31.4 | 28.1 | 05.7 |
| | 4.2 கலால் வரி | 15.5 | 13.9 | 02.8 |
| | 4.3 உரிமைக்கட்டணங்கள் | 00.1 | 00.1 | - |
| 5 | சர்தேசவர்த்தகம் மீதான வரிகள் | 29.0 | 25.9 | 05.3 |
| | 5.1 இறக்குமதித்தீர்வை | 27.3 | 24.4 | 05.0 |
| | 5.2 ஏற்றுமதித்தீர்வை | 01.7 | 01.5 | 00.3 |
| | | 100.0 | 89.4 | 18.2 |

**செல்வ வரி** (WEALTH TAX)

நிறுவனம் அல்லது தனி நபரின் பொருளாதார வளங்களில் குறிப்பிட்ட பெறுமதிக்கு மேற்பட்ட தொகையின் மீது விதிக்கப்படும் வரி செல்வ வரி எனப்படும். செல்வம் மொத்தமாகவும், தனியாகவும் கவனிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிடம், வாகனம், நகை, பணம் என்பன செல்வமாக கருதப்படும். 1/2, 3/4, 1, 2 என்ற விருத்தி முறையில் விதிக்கப்படுகின்றது. மொத்த வரி வருவாயில் ஏறக்குறைய 5% ஆகும். 1992 இல் இருந்து இவ்வரி இலங்கையில் நீக்கப்பட்டுள்ளது.

வதிவுள்ள பிரசையாயின் இலங்கையில் அசைவுள்ள அசைவற்ற ஆதனங்கள் மீதும், இலங்கைக்கு வெளியிலுள்ள அசைவுள்ள ஆதனங்களும் வதிவற்ற பிரஜை ஆயின் அதற்கு இலங்கையிலுள்ள எல்லா ஆதனங்களின் மீதும் வதிவற்ற கம்பனி ஆயின் இலங்கையிலுள்ள அசைவற்ற ஆதனங்கள் மீதும் விதிக்கப்படும்.

## நன்கொடைவரி (GIFT TAX)

பணமாக அல்லது வேறு சொத்தாக பண நன்மைகளை பிறருக்கு அன்பளிப்பாக வழங்குவதற்காக விதிக்கப்படும் வரி நன் கொடை வரி எனப்படும். நிறுவனங்கள் அதிக விளம்பரம் செய்தலை கொடை வரி மூலமாகக் கட்டுப்படுத்தலாம். நன்கொடை மூலமாக செலவுகளை உயர்த்தி வருமானத்தைக் குறைத்து வரித்தவிர்ப்புச் செய்தலைக் குறைக்க நன்கொடை வரி உதவலாம்.

## மரணச் சொத்து வரி - பூதல் வரி (ESTATE DUTY)

ஒருவரின் இறப்பின் பின்னர் அவரின் சொத்துரிமையை இயல்பாக பெறுவதற்குரிய பெறுமதிக்கு செலுத்தும் வரி மரணச் சொத்து வரி எனப்படும்.

இலங்கையில் கொடை வரியுடன் பூதல் வரியும் அண்மையில் நீக்கப்பட்டுள்ளன. அறவிடப்படும் வரி வருமானம் குறைவாகவும் அறவிடுவதற்காக ஏற்படும் செலவு கூடுதலாகவும் இருப்பதால் இவை நீக்கப்பட்டுள்ளது. சில நாடுகளில் (உ+ம்) இங்கிலாந்து இவ்வரிக்கு பதிலாக மூலதன மாற்று வரி (CAPITAL TRANSFER TAX) செயற்படுத்தப்படுகின்றன.

## தடுத்து வைத்தல் வரி (WITH HOLDING TAX)

நிதி நிறுவனங்களின் சேமிப்பு, நிலையான வைப்பு வட்டி வருமானத்தின் மீது விதிக்கப்படும் வரி பிடித்து வைத்தல் வரி எனப்படும். வர்த்தக வங்கிகள், நிதிக்கம்பனிகள், தேசிய சேமிப்பு வங்கி என்பன வைப்பாளரின் வட்டி, வருவாயில் வரியைக் கணித்து தாம் செலுத்தும் வட்டியில் கழித்து இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும். வருமான வரி செலுத்த வேண்டிய வைப்பாளரின் வட்டி வருவாயில் மட்டுமே வரி விதிக்கப்படும். வரி வீதம் 15% ஆகும்.

## புனருத்தாரண வரி (REHABILITATION TAX)

இனக்கலவர வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட சொத்துக்களையும் தொழில் துறையையும் புனரமைக்க நிதி திரட்டுவதற்கான வரி புனருத்தாரண வரி எனப்படும். இத்திட்டத்தின் படி தொழிலாளர் சம்பளத்தில் மாதாந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1% வரியாகக் கழிக்கப்படும். 1984இல் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம் பின் கைவிடப்பட்டது. சில பொதுக் கூட்டுத்தாபனங்கள் விற்பனைப் பெறுமதியில் 1% ஆக புரள்வு வரியுடன் சேர்த்து அறவிட்டன.

**களியாட்ட வரி (ENTERTAINMENT TAX)**

பொழுது போக்கு நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு வழங்கும் அனுமதிக்கும் நிகழ்ச்சியினால் கிடைக்கும் வருமானங்களுக்கும் விதிக்கப்படும் கட்டணம் களியாட்ட வரி எனப்படும். திரைப்பட காட்சிகளுக்கான நுழைவுச் சீட்டு மூலமாக இவ்வரி கூடுதலாக திரட்டப்படுகின்றது. உள்ளூராட்சிச் சபைகள் களியாட்ட வரியை அறவிடுகின்றன. இன்னிசை நிகழ்ச்சி, நாடக விழாக்களின் நுழைவுச் சீட்டு வருமானத்தின் குறித்த வீதத்தைச் செலுத்த வேண்டும்.

**முத்திரை தீர்வை ( STAMP DUTY )**

குறிப்பிட்ட சில பொருட்களைக் கைமாற்றும் போது விதிக்கப்படும் வரி முத்திரை வரி எனப்படும். பதிவுக் கட்டணங்கள், பிற கட்டணங்கள் (உ+ம்) கடவுச் சீட்டுப் பெறும் கட்டணம்) முத்திரை மூலமாகவே செலுத்தப்படுகின்றன காணி உறுதி பதிவு செய்தல், பற்றுச் சீட்டுக்கள், சான்றுப் பத்திரம், பணமீட்பு (வங்கிகளில்) என்பவற்றுக்கும் முத்திரை வரி செலுத்த வேண்டும். ஆகக் குறைந்த முத்திரைக் கட்டணம் 2/- ஆகும்.

**உரிம வரி / உரிமைக்கட்டணம் (LICENSE FEE )**

உடமையை பதிவு செய்தல், அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலின் போது செலுத்தும் வரி உரிம வரி எனப்படும். வாகன உடமையை பதிவு செய்தல், வாகனம், வானொலி, தொலைக்காட்சி, என்பவற்றுக்கான அனுமதிப் பத்திரங்கள் மூலமாக உரிமை வரி திரட்டப் படுகின்றன. வருமான அளவு அதிகரிப்பினும் வரி அளவு மாறாத தொகையீட்டுவரி முறையில் அறவிடப்படுகின்றது.

**மூலதன மிகை வரி ( CAPITAL GAINS TAX )**

மூலதன இலாபங்களின் மீது விதிக்கப்படும் வரி மூலதனமிகை வரி எனப்படும். சொத்துக்களை விற்றல் அல்லது மாற்றலின் போது கிடைக்கும் இலாபங்கள் மூலதன இலாபங்கள் ஆகும். முதலீடுகளை விற்றல், கைமாற்றல், (பங்குகள்) மூலம் கிடைக்கும் இலாபங்களுக்கும் இவ்வரி செலுத்த வேண்டும். இலாபம் தேறியபின் குறித்த ஒரே சதவீதமாக மட்டும் செலுத்தப்படும்.

**பந்தய, விளையாட்டு வரி ( BETTING & GAMING LEVY )**

குதிரைப் பந்தயங்களுக்கு பணம் கட்டல் நிலையங்களை நடாத்துவதற்கு அனுமதித்து தொழில்பாட்டு வருமானங்கள் தொடர்பாக வருடாந்தம் அறவிடும் வரியாகும். கட்டுப்பாடு, வருமான் நோக்கமாகவே இவ்வரி அறவிடப்படுகின்றது. புக்கி நிறுவனம் 1 இலட்சம் ரூபாவும், சூதாட்டப் பந்தயங்களை நடாத்துபவர் 10 இலட்சம் ரூபாவையும் செலுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறுமதி கூட்டிய வரி ( VALUE ADDED TAX ) ( V.A.T )

பொருளின் விலையில் மேலதிகமாக இலாபமாக கூட்டிய பெறுமதியில் விதிக்கப்படும் வரி பெறுமதி கூட்டிய வரி எனப்படும். அதாவது கூட்டிய விலை (இலாபத்தில்) மட்டும் விதிக்கும் வரியாகும்.

உதாரணமாக உற்பத்தியாளன் விலை 1000/= மொத்த விலை 1200/= சில்லறை விலை 1500/= ஆகவும் வரி 10% மும் ஆயின் - 1000/= ரூபாவில் 100/= 1200/= ரூபாவில் 120/= 1500/= இல்150/= எனச்செலுத்தாமல்150/= ரூபாவை உற்பத்தியாளன் 100/= மொத்த விற்பனையாளன் 20/= சில்லறை விற்பனையாளன் 30/= என செலுத்துதல் ஆகும். இலங்கையில் 1994 வரி ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இங்கிலாந்தில் வெற்றிகரமாக செயல்ப்படுத்தப்படுகின்றது.

## இறைகள், வீட்டு வரி (RATES)

சமூகத்தினர் நாட்டின் பொதுச் செல்வங்களைப் பயன்படுத்துவதற்காக உள்ளூராட்சி சபைகள் அறவிடும் வரியாகும். மத்திய அரசினால் உள்ளூராட்சி அரசுக்கு வருமானம் பெற அனுமதித்திருக்கும் ஒரு வழியாகும். நகரங்களில் வீட்டு வரியாகவும் கிராமங்களில் சோலைவரியாகவும் அறவிடப்படும். சொத்துக்களின் வருடாந்த வாடகை அல்லது குத்தகைப் பெறுமதி அடிப்படையில் காலாண்டு தொடர்பாகத் தீர்மானிக்கப்படும். வருட ஆரம்பத்தில் செலுத்த வேண்டும் இல்லையேல் தண்டப்பணத்துடன் செலுத்த வேண்டும்.

## பாதுகாப்பு வரி (DEFENCE LEVY)

நாட்டின் அமைதியின்மை காரணமாக ஏற்பட்ட மேலதிக பாதுகாப்புச் செலவினங்களை ஈடுசெய்ய அறவிடப்படுகின்ற வரி பாதுகாப்பு வரி எனப்படும். புனருத்தாரண வரி போன்றவற்றுக்குப் பதிலாக தற்காலிகமாக அறவிடப்படும் வரி ஆகும். பாதுகாப்புச் செலவின் அதிகரிப்புக் காரணமாக 1% இருந்து 3% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. சில அங்கீகரித்த நிறுவனங்கள் (உ+ம் இறக்குமதியாளர்) செலுத்த வேண்டும்.

### வரிகளை அறவிடும் நிறுவனங்கள்

1. உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
2. சுங்கத் திணைக்களம்
3. கலால் திணைக்களம்
4. மோட்டார் போக்கு வரத்துத் திணைக்களம்
5. தொலைத் தொடர்புத் திணைக்களம்
6. உளளூராட்சித் திணைக்களம்
7. மாகாண சபைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசு வரி வருவாயை இழக்கும் அமைப்புக்கள்

1. ஏற்றுமதி பதனிடல் பிரதேசம்
2. தீர்வையற்ற கடை
3. ஏற்றுமதிக் கிராமங்கள்
4. மக்கள் கம்பனிகள்
5. விலை கூறப்பட்ட கம்பனிகள்
6. சிறு கம்பனிகள்
7. புதிய கைத்தொழில் நிறுவனங்கள்
8. இலங்கை முதலீட்டுச் சபை அங்கீகரித்த வேறு நிறுவனங்கள்

## மாகாணசபையால் நிர்வகிக்கப்படும் வரிகள்

இலங்கை அரசியலமைப்பின் 13வது திருத்தம் மூலம் மாகாணசபைகள் பின்வரும் வரிகளை அறவிடுவதற்கு வகை செய்கின்றது.

1) மொத்த,சில்லறை வியாபாரம் மீதான மொத்த விற்பனைவரி நிர்வாகம்
2) பந்தயம், லொத்தர்கள் (தேசிய லொத்தர் சபை நீங்கலாக) மீதானவரிகள்
3) மதுபானவிற்பனை நிலையங்கள் மீதான அனுமதிப்பத்திரக்கட்டணம்
4) மோட்டார் வாகன உத்தரவுப்பத்திரக்கட்டணம்
5) மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழான விதிப்பனவுகள்
6) நீதிமன்றங்கள் மூலம் அறவிடப்படும் விதிப்பனவுகள்
7) காணி, மோட்டார் கார் போன்ற சொத்துக்களை கைமாற்றம் செய்வதற்கான முத்திரைத்தீர்வை
8) ஏனைய மாகாணசபையின் அதிகாரங்களுக்கு உட்பட்ட விதிப்பனவுகள் கட்டணங்கள்

## வருமானவரிக்கு தொழிலை விட்டு விலகுவோர் ,இழைப்பாறுவோர் பங்குபற்றுதல்

தொழிலை விட்டு விலகுவோர் விடயத்தில் வழங்கப்படும் ஒரே முறைக் கொடுப்பனவுகளான இளைப்பாறிய பணிக்கொடை, பதவியிழப்பிற்கான நஷ்டஈடு,சேமலாப நிதியிலுள்ள நிலுவை, ஊழியர்நம்பிக்கை நிதிச்சபையிலிருந்து கிடைத்த ஏதேனும் தொகை போன்றவையும் வரி விதிப்பிற்குள்ளாகின்றன. ஒரேமுறைக்கொடுப்பனவிற்கான வரி விதிப்புக்கள் வரிவீதம் பின்வருமாறு அமைகின்றன.

| | | | |
|---|---|---|---|
| முதலாவது | 200,000 ரூபா | – | வரியில்லை |
| அடுத்த | 50,000 ரூபா | – | 5வீதம் |
| அடுத்த | 50,000 ரூபா | – | 10 வீதம் |
| மீதித் தொகை | | | 15 வீதம் |

தொழிலை விட்டு விலகுவோரின் இத்தகைய ஒரே முறைக் கொடுப்பனவுகள் 1.5 மில் லியன் ரூபாவை மிஞ்சும்போது மேலே தெரிவித்த முறைகளிலல்லாமல் சாதாரணவருமானவரி விதிப்பு முறைகளே பின்பற்றப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகம் தொடர்பான பல நாட்டு அமையங்கள்

## (01) அபிவிருத்திக்கும் புனரமைப்புக்குமான சர்வதேச வங்கி (I B R D)
## (INTERNATIONAL BANK FOR RECONSTRUCTION & DEVELOPMENT)
## (WORLD BANK) ( உலக வங்கி )

அமெரிக்காவின் பிரிற்றன் வூட் நகரில் 28 நாடுகளின் பிரதிநிதிகளினால் 1944ல் ஏற்படுத்திய ஒப்பந்தத்தின் கீழ் 1945 இல் ஆரம்பிக்கப்பட்டது. உலக மகாயுத்தப் பொருளாதார அழிவைப் புனரமைக்க உருவாக்கிய வங்கி தொடர்ந்தும் அபிவிருத்திக்காக இயங்குகின்றது. தற்போது 150 நாடுகள் உறுப்புரிமை பெற்றுள்ளன. இலங்கை 1950ல் சேர்ந்து கொண்டது.

நோக்கம்

1) உற்பத்தி விருத்திக்கு மூலதனம் வழங்கல்
2) பிறநாட்டு முதலீடுகளை விருத்தி செய்தல்.
3) அங்கத்தவ நாடுகளின் மூலதன விருத்திக்கு உதவுதல்
4) சர்வதேச வர்த்தகத்தை ஊக்குவித்தல்.

தொழிற்பாடுகள்

1) பொருளாதார அபிவிருத்தித்திட்டங்களை வகுத்தல்
2) பொருளாதாரத்திற்கான தடைகளை எடுத்துக் காட்டல்.
3) தடைகளை நிவர்த்திக்க உத்திகள், ஆலோசனைகள் வழங்கல்.
4) பொருளாதார அபிவிருத்திக்கான கடன்வசதி வழங்கல்

உலக வங்கிக் குழுவின் அமைப்புக்கள்

1) சர்வதேச நாணய நிதி
2) சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம்
3) சர்வதேச அபிவிருத்திச் சங்கம்
4) பல்தேசிய உத்தரவாத முதலீட்டு முகவரகம்

## (02) சர்வதேச நாணய நிதி (I. M. F) ( INTERNATIONAL MONETARY FUND)

நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்காக சர்வ தேச வியாபாரத்தையும் வெளிநாட்டு முதலீடுகளையும் அபிவிருத்தி செய்ய நிதிக்கொள்கை நிதி முறைமைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்தலை நோக்கமாகக் கொண்டு 1945 இல் ஆரம்பிக்கப்பட்டது.

தொழிற்பாடுகள்

1) சர்வதேச வியாபார விருத்திக்கு உதவிகள் வழங்கல்
2) சென்மதி நிலுவை தீர்வுக்கான கடன்வசதி வழங்கல்
3) சர்வதேச நாணய முறையை ஒழுங்குபடுத்தல்/நடைமுறைப்படுத்தல்.
4) சிறப்பு எடுப்பனவு உரிமைத் திட்டத்தில் மேலதிக நிதிவசதியை நிரம்பல் செய்தல்
5) கடன் வசதிக்காக நிதி மூலங்களை அறிமுகம் செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அங்கத்தவப் பணம்**

அங்கத்துவ நாடுகள் சொந்தநாணயம், வெளிநாட்டு நாணயமாகவும், தங்கமாகவும் வைப்புச் செய்தவை. அங்கத்தவ நாட்டு நாணயத்தில் 75% மும் மிகுதி 25% சர்வதேச நாணய நிதி விதிக்கப்படும் நாணத்தில் செலுத்த வேண்டும். கடன் அளவு, வாக்குரிமை இப்பங்களிப்பில் தங்கியிருக்கும்

**தன்னிச்சையான அளிப்பு**

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு கடன் வழங்குமாறுஅபிவிருத்தி அடைந்த நாடுகள் தாமாக செலுத்துவது.

**உதவிப்பணம்**

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் விசேட அபிவிருத்தித்திட்டத்திற்கென அபிவிருத்தியடைந்த நாடுகள் செலுத்துவது

**விசேட எடுப்பனவு உரிமை (SPECIAL DRAWING RIGHT) (S. D. R)**

சென்மதி நிலுவைப் பற்றாக்குறை நாடுகளுக்கு நிதியளிக்க சென்மதி நிலுவை மிகை நாடுகளால் பங்களிப்பு

நாடுகளின் அங்கத்தவ பண அளவுக்கேற்ப விசேட எடுப்பனவு உரிமை அளவு வரையறுக்கப்படும். சர்வதேச வியாபாரக் கொடுக்கல் வாங்கலுக்கு உதவுவதால் சர்வதேச வர்த்தக அபிவிருத்திக்கு உதவும்.

**கடன் வசதிகள் பெறும் நாடுகள் நிறைவேற்ற வேண்டியவை**

1) சர்வதேச நாணய நிதியின் நிபுணர்குழு ஆலோசனைக்குக் கட்டுப்படுதல்.
2) நாட்டிற்கான மொத்தக் கடன் எல்லையை மீறாது இருத்தல்.
3) சர்வதேச நாணய முறையை மீறாது இருத்தல்.
4) நாணயப் பெறுமதி இறக்கம்/ ஏற்றம் சுதந்திரமாக மேற்கொள்ளாமை

## (03) சர்வதேச நிதிக்கூட்டுத்தாபனம் (I. F. C) (INTERNATIONAL FINANCE CORPORATION)

தனியார்துறை முயற்சிகளுக்கு பொருளாதார அபிவிருத்தி கருதி தேவைப்படும் நிதிவசதிகளைப் பெற்றுக் கொடுக்க 1956 இல் நிறுவப்பட்டு 1957 இல் உலகவங்கியுடன் இணைக்கப்பட்டது. தற்பொழுது உலக வங்கியின் செயற்பாட்டுச்சபையால் நிர்வகிக்கப்படுகின்றது. 128 உறுப்பினர்களைக் கொண்டிருந்தபோது 107 நாடுகள் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளாக இருந்தது.

**தொழிற்பாடுகள்**

தனியார் முயற்சிகளுக்கு நேரடிக் கடன் வசதி, தனியார் துறைக்கு கடன் வழங்கும் நிதி நிறுவனங்களுக்கு கடன்வசதி, வளர்முக நாடுகளுக்கு பிற நாட்டு முதலீடுகளை விருத்தி செய்தல், வதிவற்ற கம்பனிகளை விருத்தி செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (04) சர்வதேச அபிவிருத்திச் சங்கம் ( I. D. A )
(INTERNATIONAL DEVELOPMENT ASSOCIATION)

குறைந்த தலாவருமானமுடைய ( 791 ஐ. அமெரிக்கடொலர்) அங்கத்தவ நாடுகளுக்கு நீண்ட காலக் கடன் வழங்குவதற்காக 1960 இல் அமைக்கப்பட்ட இந் நிறுவனத்தில் 1986ல் 134 நாடுகள் அங்கம் வகிக்கின்றது. 10 வருட தயவுக் காலத்துடன் 50 வருடகால அபிவிருத்திக்கடன்களை வட்டி இன்றி வழங்குகின்றது. இலங்கை கூடுதலாக நிதி பெறும் சர்வதேச அமைப்பு இதுவாகும். உலக வங்கியின் "மென் கடன் சாளரம்" என இந்நிறுவனம் அழைக்கப்படும்.

## (05) ஐக்கிய நாடுகளின் வியாபாரம் அபிவிருத்திக்கான மகாநாடு.
(UNITED NATION GONFERENCE FOR TRADE & DEVELOPMENT) (U N C T A D)

வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு வெளிநாட்டு வியாபாரத் தடைகளை நீக்கி வாழ்க்கைத்தரத்தை உயர்த்த சர்வதேசரீதியாக ஒத்துழைப்புப்பெற 1964 இல் அமைக்கப்பட்டது. 4 ஆண்டுகளுக்கு ஒரு மகாநாடு நடாத்தும் இவ்வமைப்பில் 162 நாடுகள் உள்ளன.

**தொழிற்பாடுகள்.**

1) ஏற்றுமதி வாய்ப்புக்களை அபிவிருத்தி செய்து பன்முகப்படுத்தல்
2) வரிச்சலுகைகளை (சகாய வரிகள்) ஏற்படுத்தல்
3) ஏற்றுமதிக்கு நியாயவிலை கிடைக்கச் செய்தல்
4) வர்த்தகத் தடைகள் செலாவணி பிணக்குகளுக்குத் தீர்வு காணுதல்
5) கைத்தொழில் விருத்திக்கு வளர்ச்சியடைந்த நாடுகளின் தொழில்நுட்ப சேவை பெற உதவுதல்

## (06) ஐக்கிய நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்திக்கான அமைப்பு
(U N I D O) (UNITED NATION INDUSTRIAL DEVELOPMENT ORGANIZATION)

வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் கைத்தொழில் அபிவிருத்திக்கு உதவுவதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பாகும். 1967ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஒரு குழுவாக அமைக்கப்பட்டு 1979ல் நிறுவன அந்தஸ்தைப் பெற்றது. 1980ல் 120 நாடுகள் அங்கத்துவம் பெற்றிருந்தன.

1) கைத்தொழில் அபிவிருத்திக்கான திட்டங்களைச் சிபார்சு செய்தல்
2) சுதந்திரவர்த்தகவலய அமைப்புக்கான நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல்
3) கூட்டுத்தாபனங்களிற்கு முகாமைத்துவதொழில்நுட்ப ஆலோசனை வழங்கல்
4) ஊழியருக்கு தொழில்நுட்பப் பயிற்சிக்கான வெளிநாடுகளில் புலமைப்பரிசில் வழங்கல்



Digitized by Noolaham Foundation:
noolaham.org | aavanaham.org

(07) சர்வதேச அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துக்கான ஐக்கிய அமெரிக்க செயலாண்மை (USAID)
(UNITED STATE AGENCY FOR INTERNATIONAL DEVELOPMENT)

அரசதுறை உட்பட சிறப்பாகத் தனியார்துறைக்கு நிதி தொழில்நுட்ப வசதிகளை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை வகுப்பதற்கான அமைப்பாகும். சிறிலங்கா வியாபார அபிவிருத்தி நிலையம் இதன் உதவியுடன் தொழில்நுட்ப முகாமைத்துவ ஆலோசனை வழங்கல் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது.

(08) ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி ஒழுங்கமைப்பு. (U N D P)
(UNITED NATION DEVELOPMENT PROGRAMME)

உறுப்புரிமை நாடுகளிடையே சீரான திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்கான தொழில்நுட்ப அறிவு நடவடிக்கைகளின் அபிவிருத்திக்கு கடன் வசதிகள் வழங்குவதற்கான ஐக்கிய நாடுகளின் அமைப்பாகும்.

(09) ஐக்கியநாடுகளின் சர்வதேசக் குழந்தைகளின் அவசரகால நிதி.
(UNICEF) (UNITED NATION INTERNATIONAL CHILDREN'S EMERGENCY FUND)

மலேரியா, கயரோகம் என்பவற்றை அழித்தல் உணவு, உடை, மருத்துவ வசதிகளை வழங்கிச் சிறுவர்களின் நலன்களை விருத்தி செய்யப் பராமரிக்கும் ஐக்கிய நாடுகளின் நிதி. இலங்கையின் சத்துணவுத் திட்டங்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகின்றது.

(10) சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம். (I. L.O)
(INTERNATIONAL LABOUR ORGANIZATION)

நாடுகளின் தொழிற்சங்கக் கூட்டவைகளால் உறுப்புரிமை பெறக்கூடிய சர்வதேச அமைப்பாகும். ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் இணைப்பு நிறுவனமாக 1919 இல் நிறுவப்பட்டது. தொழிலாளரின் பொருளாதார நிலைமைகளையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதற்காகவும் பொருளாதார சமூகத்தரங்களை உறுதிப்படுத்துவதற்காகவும் உதவுதல் இதன் குறிக்கோளாகும்.

(11) ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம். (E. E. C)
(EUROPEAN ECONOMIC COMMUNITY)

அங்கத்துவ நாடுகளிடையே ஒரே நாட்டின் பகுதிகள் போல் சீரான ஒத்த பொருளாதார அரசியல் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அமைப்பாகும். மூலப்பொருள், மூலதனப் பொருள், தொழில்நுட்பம், உழைப்பு, ஏற்றுமதி இறக்குமதி என்பன கட்டுப்பாடின்றிப் பரிமாற்ற உதவும் இவ்வமைப்பில் இங்கிலாந்து, அயர்லாந்து, நெதர்லாந்து, பெல்ஜியம், டென்மார்க், இத்தாலி, பிரான்ஸ், மேற்குஜேர்மனி ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (12) ஐரோப்பிய சுதந்திர வர்த்தகக் கழகம்.

(EUROPEAN FREE TRADE ASSOCIATION)

அங்கத்தவ நாடுகளிடையே வர்த்தக நாணயமாற்று, தீர்வை கட்டுப்பாடுகளை விலக்கி மற்ற நாடுகளுடன் ஒரே வர்த்தகக் கொள்கைகளைப் பின்பற்றி வர்த்தகத்தில் ஈடுபட்டு சர்வதேச வர்த்தகத்தை விரிவாக்கலைக் குறிக்கோளாகக் கொண்ட அமைப்பாகும். சுவீடன், சுவிற்சிலாந்து, இங்கிலாந்து, ஒஸ்ரியா, டென்மார்க், நோர்வே, போர்த்துக்கல் ஆகிய 7 நாடுகளை உள்ளடக்கியது.

## (13) கிழக்குப் பொருளாதாரச் சமூகம். - கொமிக்கோன்

(EASTERN ECONOMIC COMMUNITY) - (COMECON)

ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம் போன்ற கிழக்கு ஐரோப்பிய சோசலிச நாடுகளிடையே கட்டுப்பாடற்ற வர்த்தக நடவடிக்கைக்கான இணைப்பு நாடுகளின் அமைப்பு. பொருளாதார, வணிக, அபிவிருத்தி தொடர்பான கூட்டுறவு பேணப்படும். இவ்வமைப்பில் பின்வரும் நாடுகள் அங்கத்துவம் பெற்றுள்ளன. கிழக்குஜேர்மனி, சோவியத்றஷ்யா, செக்கோசிலாவாக்கியா, ருமேனியா, பல்கேரியா, போலாந்து.

## (14) வியாபாரம் இறுப்புத் தொடர்பான பொது ஒப்பந்தம். (G.A.T.T)

(GENERAL AGREEMENT ON TRADE AND TARIFF)

அங்கத்தவ நாடுகளின் சர்வதேச வியாபாரத்தை இலகுவாக்குவதும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்குச் சாதகமான வர்த்தகக் கொள்கைகளை வகுத்தலும் பிரதான நோக்காகக் கொண்ட அமைப்பாகும். 1948 இல் அமைக்கப்பட்ட இவ்வமைப்பில் 95 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அங்கத்துவம் பெறாத சிலநாடுகள் கூட ஒப்பந்த நியதிகளைப்பின்பற்ற இணங்கியுள்ளன. இது உலக வர்த்தகத்தில் 85 % கட்டுப்பாடு செய்கின்றது.

தொழிற்பாடுகள

1) நாடுகளிடையே வர்த்தகக் கூட்டு ஒத்துழைப்பினை ஏற்படுத்தல்
2) சர்வதேச வியாபாரப் பிணக்குகளுக்குத் தீர்வு ஏற்படுத்தல்.
3) வளர்முக நாடுகளின் ஏற்றுமதிக்கு நியாயமான விலை கிடைக்கச்செய்தல்
4) வேறுபட்ட முறையினை நீக்குவதுடன் சகாயவரிமுறையை ஊக்குவித்தல்
5) ஒப்பீட்டுக் கிரயக் கோட்பாட்டை வலியுறுத்தி நாடுகளைப் பின்பற்றச் செய்து குறைந்த கிரயத்தில் எல்லாத் தேவைகளையும் நிறைவு செய்ய உதவுதல்

## (15) 77 நாடுகளின் குழு (GROUP 77)

ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க அபிவிருத்தியடையும் நாடுகளை உள்ளடக்கிய குழுவாக ஆரம்பிக்கப்பட்டபோது 77 நாடுகள் இன்று 127 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. பொருளாதார அரசியல் சர்வதேச பிரச்சனைகள் தொடர்பாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் இலக்குகளை பிரதிபலிக்கக்கூடிய அமைப்பாகும். உதவு குழுமன்ற மகாநாடுகளினல் பங்குபற்ற முன் தமக்குள் ஒரு மகாநாட்டை நடாத்தும் குழு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(16) ஆசியபசுபிக் நாடுகளுக்கான பொருளாதார சமூக ஆணைக்குழு

( E S C A P ) ( ECONOMIC & SOCIAL COMMISSION FOR ASIA & PACIFIC )

ஆசிய தூரகிழக்கு நாடுகளுக்கான பொருளாதார ஆணைக்குழு என்ற பெயரில் 1947 இல் ஆரம்பிக்கப்பட்டு 1974 இல் ஆசிய பசுபிக் நாடுகளுக்குகான பொருளாதார சமூக ஆணைக்குழு என மாற்றியமைக்கப்பட்டுத் தொழிற்படுகின்றது.

கைத்தொழில், வீடமைப்பு, குடித்தொகை ,வியாபாரம், போக்குவரத்து தொடர்பாடல், தொழில்நுட்பம், சமூக அபிவிருத்தி, இயற்கை வளங்கள் தொடர்பான கொள்கைகள், திட்டங்களை வகுப்பதில் இக்குழு ஈடுபடுகின்றது. இக்குழுவின் இணைப்பு நிறுவனமாக ஆசிய அபிவிருத்தி வங்கி/ ஆசிய புனரமைப்புக் கூட்டுத்தாபனம்/ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் தொழில்படுகின்றது.

(17) ஆசிய அபிவிருத்தி வங்கி ( A .D .B ) ( ASIAN DEVELOPMENT BANK)

ஆசிய தூரகிழக்கு நாடுகளுக்கான பொருளாதார ஆணைக்கழகப் பிரதேச நாடுகளின் அபிவிருத்திக்கு நிதி வழங்க 1966 இல் பிலிப்பைன்ஸ் தேச மணிலா நகரில் அமைக்கப்பட்டது. ஆலோசனை வழங்குவதுடன் கடன் வழங்க ஆசிய அபிவிருத்தி நிதி, பல்நோக்கு நிதி இரண்டையும் பயன்படுத்தி வருகின்றது. 31 ஆசிய பசுபிக் நாடுகளும் பிரதேசத்திற்கு வெளியே 14 நாடுகளையும் அங்கத்தவர்களாகக் கொண்டது. 1968ல் இருந்து இலங்கைக்கு உதவி வருகின்றது. உறுப்புரிமை நாடுகளின் அபிவிருத்தியை திட்டமிட்டு கருத்தரங்குகள் பயிற்சி நெறிகள் மூலம் அவற்றைச் செயல்படுத்தக்கூடிய முறைகளை அறிமுகம் செய்வதுடன் மூலப்பொருள் ஏற்றுமதியைக் குறைத்து இறக்குமதிப் பதிலீடுகளை உற்பத்தி செய்ய ஊக்கமளித்து வருகின்றது கிராமிய அபிவிருத்தி (மின் இணைப்பு) தெங்குச்செய்கை மகாவலி அபிவிருத்தி என்பனவற்றுக்கு மூலதன தொழில்நுட்ப உதவிகளை வழங்கிவருகின்றது.சிறிய நடுத்தர கைத்தொழில் கடன் திட்டம ivக்கு நிதியீட்டம்' செய்துள்ளது.

(18) ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம். ( ASIAN CLEARENCE UNION )

அங்கத்தவ நாடுகளின் வெளிநாட்டு வர்த்தகக் கடன்களின் தீர்ப்பனவுகளை இலகுவாக நிறைவேற்ற ஏழு நாடுகளைக் கொண்டு அமைக்கப்பட்டதாகும். இலங்கை, இந்தியா, பர்மா, பங்காளதேசு, பாகிஸ்தான், நேபாளம், ஈரான் ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

(19)தெற்காசியநாடுகளின் வியாபாரகைத்தொழில் ஒத்துழைப்புக்கான கழகம்.

( SOUTH ASIAN COUNCIL FOR CORPORATION IN TRADE & INDUSTRY )

தென்னாசிய நாடுகளிடையே கூட்டாக வர்த்தகம் கைத்தொழிலை மேம்படுத்தி பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்வதற்கான அமைப்பாகும். இதில் இலங்கை இந்தியா பங்காளதேசம் பாகிஸ்தான் பூட்டான் மாலைதீவு ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(20) ஆசியான் - தென்கிழக்காசிய நாடுகளின் கழகம்.

(A S E A N) (ASSOCIATION FOR SOUTH EAST ASIAN NATIONS)

ஏறக்குறைய சம பொருளாதார வளர்ச்சியுடைய நாடுகளினால் 1967 இல் தென்கிழக்காசிய நாடுகளின் கழகம் அமைக்கப்பட்டது. இதில் மலேசியா, சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், இந்தோனிசியா, தாய்லாந்து, புறூணை, ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன. பொருளாதார கலாச்சார உறவுகளை வளர்த்தல்/ ஒழுங்கானதீர்வை முறையைப் பேணல் / கம்யூனிச கொள்கை எதிர்ப்புக்கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்

(21) சார்க் - தெற்காசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்பு அமையம்.

(S A R R C) - (SOUTH ASIAN ASSOCIATION FOR REGIONAL CORPORATION)

தெற்காசிய நாடுகளிடையே பொருளாதார சமூக அரசியல் உறவுகளை வளர்த்து ஒற்றுமையை அதிகரிக்க உருவாக்கப்பட்ட அமைப்பாகும். இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், நேபாளம், பூட்டான், மாலைதீவு, ஆகிய 7 நாடுகள் அங்கம் வகிக்கின்றது . போட்டி தவிர்ப்பு/ பொருளாதார அரசியல் ஒத்துழைப்பு/ கலாச்சார தொடர்பு மூலம் குறிக்கோள்களை நிறைவேற்றுகின்றது.1992ல் இலங்கை ஜனாதிபதி தலைமைத்துவத்தை ஏற்றிருந்தார்

(22) பாட்டா - பசுபிக் பிராந்திய உல்லாசப் பயணிகள் சங்கம்.

PATA - ( PACIFIC ASIAN TOURIST ASSOCIATION )

உல்லாசப் பிரயாணக் கைத்தொழில் அபிவிருத்திக்கென வளர்ச்சியடைந்த, அடைந்து வருகின்ற நாடுகளைக் கொண்ட அமைப்பாகும். குறைந்த முதலீட்டுடன் கூடிய அன்னியச் செலாவணியைத் தொடர்ச்சியாக சம்பாதிக்க வளர்ச்சியடைந்த நாடுகளின் உல்லாசப் பயணிகளைக் கவரக்கூடிய நடவடிக்கைகளை இணைந்து மேற்கொள்ளலைக் குறிக்கோளாகக் கொண்டது.

1) வழிகாட்டிகளை பிரசுரித்தல,வழிகாட்டுனர்க்கு பயிற்சியளித்தல்
2) பாதுகாப்பைத்திட்டமிட்டு உறுதிப்படுத்துதல்
3) உல்லாசப் பயண வளங்களைப் பெறக்கூடிய விளம்பரங்களை மேற்கொள்ளல்.

(23) ஒபெக் - பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு

(O.P.E.C) - (ORGANIZATION OF PETROLEUM EXPORTING COUNTRIES)

பெற்றோலிய உற்பத்தி, ஏற்றுமதி நாடுகளின் 1960 இல் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பே ஒபெக் நிறுவனமாகும். பெற்றோலிய நிரம்பலை ஒழுங்கு படுத்திக் கட்டுப்படுத்தல் விலைகளை இணைந்து தீர்மானித்தல் மூலம் ஏற்றுமதி வருவாயைக் கூட்டல், போட்டிகளைத் தவிர்த்தல். மேலும் பெற்றோலிய இறக்குமதியால் பாதிக்கப்பட்ட வளர்முக நாடுகளுக்கு இலகுவான கடன் வசதியளிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (24) ஆசிய குத்தகைக் கழகம் ( ASIAN LEASING ASSOCIATION )

நிலையான சொத்துக்கள், கருவிகள், உபகரணங்களைக் குத்தகைக்கு வழங்கும் ஆசிய நாடுகளின் இணைப்பு நிறுவனமாகும். இதன் தலைவராக லங்கா ஒறிக்ஸ் லீசிங் கம்பனியின் பிரதிநிதி இருந்திருக்கின்றார். இலங்கை, இந்தியா, பங்களாதேஸ் பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், கொறியா, சிங்கப்பூர், தாய்வான், தாய்லாந்து, ஆகிய நாடுகள் உறுப்பினராக உள்ளன. வேறுபட்ட குத்தகை முறையை இணைந்து அபிவிருத்தி செய்தல் பிரதான நோக்கமாகும்.

## (25) பல்தேசிய உத்தரவாத முதலீட்டு முகவரகம் (MULTILATERAL GUARANTEE INVESTMENT AGENCY )

மூலதன ஏற்றுமதி இறக்குமதி நாடுகள் பாதுகாப்பான வாய்ப்புக்களை ஏற்படுத்த 1986 இல் உலக வங்கியால் ஏற்படுத்தப்பட்ட இணைப்பு நிறுவனமாகும். நாடுகளிடையே ஒத்துழைப்பு முதலீடுகளுக்கான உத்தரவாதம் ஆலோசனைகள் வழங்கி வளர்முக நாடுகளில் கடன்படுவதைக் குறைத்து நேரடி முதலீடுகளை ஊக்குவிக்கின்றது. அரசியல் நாணயமாற்று உழைப்பின் ஊதியத்தைத் தாய் நாட்டிற்கு மாற்றுதல் தொடர்பான இடர்களுக்கு காப்புறுதி அளிப்போருக்கு மறுகாப்புறுதிச் சேவை வழங்குகின்றது.

## (26) உதவு குழு மன்றம். ( AID CONSORTIUM )

நாடுகளுக்குப் பொருளாதார முதலீட்டுக்கு மட்டும் கடன் உதவி வழங்குவதற்காக (8) சர்வதேச நிதி நிறுவனங்கள் (15) நாடுகள் இணைந்து உருவாக்கிய அமைப்பாகும். கடன்களைப் பெறும் நாடுகள் சமூக அபிவிருத்தி நுகர்வுச் செலவுகளுக்குப் பயன்படுத்தாததை எச்சரிக்கையாக உறுதி செய்கின்றது. தொழில்நுட்ப ஆலோசனைகளையும் வழங்குகின்றது

## (27) கொழும்புத்திட்டம் ( COLOMBO PLAN )

தெற்கு, தென்கிழக்காசிய நாடுகளின் பொருளாதார சமூக ஒத்துழைப்புக்கான அமைப்பாக கொழும்பில் முதல் திட்டம் வகுக்கக் கூட்டப்பட்டமையால் இப் பெயரால் அழைக்கப்படுகின்றது. இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், நியூஸ்சிலாந்து ஆகிய நாடுகளால் ஆரம்பித்த அமைப்பில் தற்பொழுது யப்பான் உட்பட பல நாடுகள் இணைந்துள்ளன.

## (28) பாங்கொக் உடன்படிக்கை ( BANKGOK AGREEMENT )

அங்கத்தவ நாடுகளுக்கிடையே தேர்ந்தெடுத்த சில பொருட்களுக்குத் தீர்வைச் சலுகைகளை வழங்குவதற்கு செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையாகும். இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், லாஒஸ்குடியரசு, தென்கொரியா குடியரசு ஆகிய நாடுகள் உடன்படிக்கை செய்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(29) வடக்கும தெற்கும் கலந்துரையாடல்

(NORTH - SOUTH DIALOGE)

வளர்ச்சியடைந்த நாடுகள் (வடக்கு) வளர்ச்சியடைந்துவருகின்ற நாடுகள் (தெற்கு) பங்குபற்றிக் கலந்துரையாடி, வளர்முக நாடுகளின் வெளிநாட்டு வர்த்தகம், பொருளாதார அபிவிருத்தி, ஏற்றுமதி வாய்ப்பு, தொழில்நுட்ப உதவி, தீர்வை ஒழுங்கு ஆகிய விடயங்களில் தீர்மானம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளாகும்.

(30) **P .L . 480** (PUBLIC LAW 480 )

வெளிநாடுகளுக்கு பண்ட உதவி வழங்குவதற்காக ஐக்கிய அமெரிக்காவின் உதவி நிபந்தனைத் திட்டமாகும். இலங்கை கோதுமை மாவினைப் பண்ட உதவியாக இத் திட்டத்தின்கீழ் பெற்று வருகின்றது. நிவாரணம் அன்பளிபபுச் செய்யப்பயன்படுத்துவதுடன் பெரும்பகுதி விற்பனை மூலம் பணமாக்கப்படும்

(31) சர்வதேச வர்த்தக நிலையம் (INTERNATIONAL TRADE CENTRE)

சர்வதேச வர்த்தக நன்மைகளை ஒவ்வொரு நாடுகளும் சமமாகப் பெற்றுக் கொள்வதை ஊக்குவிக்க 1964 இல் வர்த்தகத் தீர்வைக்குமான பொது ஒப்பந்த நிறுவனத்தால் அமைக்கப்பட்டது. 1968 இல் இருந்து "உங்ராட்","கற்" என்பவற்றால் கூட்டாகச் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. வர்த்தக மேம்பாட்டிற்கான செயற்திட்டங்களைத் தயாரித்தல், நடைமுறைப்படுத்தலில் வளர்முக நாடுகளுக்கு உதவுகின்றது. ஏற்றுமதிக்கான சந்தைகள் சந்தைப்படுத்தல் தொழில்நுட்பங்கள் தொடர்பான தகவல்களை வழங்குதல், ஏற்றுமதி மேம்பாடு, சந்தைப்படுத்தல் சார்ந்த நிறுவனங்களை ஏற்படுத்துதல் (உ+ம்) இலங்கையில் ஏற்றுமதி அபிவிருத்திச்சபை

தேசிய ஆளணியைப் பயிற்றுவித்தல் போன்ற பணிகளிலும் ஈடுபடுகின்னது

**இலங்கையின் உலக வர்த்தக நிலையம்**

1) கொழும்பு கோட்டை "றான்ஸ் வேக் ஹவுஸ்" 1991ல் உலக வர்த்தகவலய மாக்கப்பட்டது.
2) ஏற்றுமதியாளருக்குஆலோசனைகள், வசதிகளை வழங்குவதைப் பிரதான குறிக்கோளாகக் கொண்டது.
3) கவர்ச்சியாக ஏற்றுமதிப் பொருள்கள் காட்சிக்கு வைக்கப்படும்.
4) வெளிநாட்டவர்கள் இலங்கைப் பொருள்களை ஒரே இடத்தில் காண்பதற்கான வசதி
5) ஏற்றுமதி அபிவிருத்திச்சபையினால் நிர்வகிக்கப்படும்.
6) கொள்வனவாளர், விற்பனையாளர், முகவர்கள், விநியோகஸ்தர்களை இனம் காணல்
7) உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகத் தூதுக் குழுக்களுக்கிடையில் தொடர்புகளை ஏற்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகம் தொடர்பான உள்நாட்டு நிறுவனங்கள்

## (1) ஏற்றுமதி அபிவிருத்திக் கழகம் (EXPORT DEVELOPMENT COUNCIL)

1) தேசிய ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டத்திற்கான கொள்கைகளை வகுப்பதற்கான அமைப்பு
2) ஜனாதிபதியைத் தலைவராகவும் ஏற்றுமதியுடன் தொடர்புடைய அமைச்சர்களை அங்கத்தவர்களாகவும் கொண்டது.
3) ஏற்றுமதி அபிவிருத்திக்கான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்து ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மூலம் நடைமுறைப்படுத்து வதைப் பிரதான குறிக்கோளாகக் கொண்டது.

## (2) ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EXPORT DEVELOPMENT BOARD)

1) ஏற்றுமதி ஊக்குவிப்புச் செயலகம் என 1979 வரை அழைக்கப்பட்டது.
2) வர்த்தக வாணிப அமைச்சின் கீழ் செயல்படும்
3) வர்த்தக வாணிப அமைச்சர் தலைவர்
4) ஏற்றுமதி அபிவிருத்திக்கழக அமைச்சர்களின் செயலாளர் அல்லது மேலதிக செயலாளர் அங்கத்தவர்கள்
5) இலங்கை முதலீட்டுச்சபை உட்பட தனியார் துறை நியமனஉறுப்பினர்கள், ஆலோசகர்கள்
6) ஏற்றுமதி அபிவிருத்திக்கான தடைகளை நிவர்த்திப்பதையும் ஊக்கு விப்புக்களை வழங்குவதையும் பிரதான குறிக்கோளாகக் கொண்டது.
7) ஜனாதிபதி ஏற்றுமதி விருதுத் திட்டம், ஏற்றுமதி அபிவிருத்தி நன் கொடைத்திட்டம் போன்றன மூலம் ஏற்றுமதியை ஊக்குவிக்கின்றது.
8) சுங்கம் திருப்பிக் கொடுத்தல், தயாரிப்பு வரை களஞ்சியத்திலிடும் திட்டம் என்பன மூலம் ஏற்றுமதிக்கான தடைகளைத் தவிர்க்கின்றது.

## (3) வர்த்தக கப்பல் தகவல் சேவை நிலையம் (TRADE & SHIPPING INFORMATION SERVICE CENTRE)

1) வர்த்தக கப்பல் துறை அமைச்சின் தனிப்பிரிவாக 1981ல் அமைக்கப்பட்டது.
2) சரியான நம்பத்தகு, நடைமுறை, வர்த்தகத்தகவல்கள் கொள்கைகளை வெளிப்படுத்தும் பிரிவு
3) தயாரிப்பாளர், ஏற்றுமதி, இறக்குமதியாளர்களுக்கு தகவல்களை வழங்கும்
4) ஆவணங்கள், சஞ்சிகைகள், புத்தகங்களைத் திரட்டிச் சான்றுடனான தகவல் பெற நூலகத்தை இயக்குகின்றது.
5) கருத்தரங்குகளை நடாத்துவதுடன் பிரச்சினைக்கு தீர்வு தர ஆலோசனைச் சேவைகளையும் வழங்கும்.
6) குறைந்த செலவில் "டெலக்ஸ்" சேவைகளை வழங்குகின்றது.
7) இறக்குமதியாளர் முகவரிகள், வர்த்தகப் புள்ளிவிபரங்களடங்கிய விபரக் கொத்துப் பராமரிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (4) இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
(IMPORT & EXPORT CONTROL DEPARTMENT)

1) ஏற்றுமதி, இறக்குமதி தொடர்பான கட்டுப்பாடுகளை நடை முறைப்படுத்தும் அமைப்பு
2) ஏற்றுமதி, இறக்குமதிகளுக்கான உத்தரவுப் பத்திரம் வழங்கல் பிரதான தொழிற்பாடு
3) தாராள வர்த்தகம் காரணமாக முக்கியத்துவம் குறைவு
4) மோட்டார் வாகனங்கள், பிளாஸ்டிக்பொருள் போன்ற சிலவற்றுக்கு உத்தரவுப்பத்திரத்தை வழங்குகின்றது.

## (5) கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் (C.W.E)
( CO-OPERATIVE WHOLESALE ESTABLISHMENT)

1) இலங்கையின் மிகப்பெரிய பொதுத்துறை வர்த்தக நிறுவனம்
2) 1949ன் விசேட பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கூட்டுத்தாபனம்
3) ஏற்றுமதி, இறக்குமதி, சந்தைப்படுத்தல்களில் ஈடுபடும் அமைப்பு
4) 1977க்கு முற்பட்ட காலத்தில் கூடிய முக்கியத்துவமான நிறுவனம்
5) பாதுகாப்பு இருப்புக்களைப் பேணுவதுடன் கிளைகள் மூலம் பங்கீடுகளில் ஈடுபடும்
6) வரையறுத்த சத்தோச-மோட்டார்ஸ் / கம்புயூட்டர்ஸ்./ பிறின்ரேஸ் ஆகிய 3 கம்பனிகள் இதன் துணைக் கம்பனிகளாகும்.
7) லங்கா மில்க் பூட்ஸ் லிமிட்டெட், ஆசிய ஹோட்டல் கோப்பரேசன் லிமிட்டெட்டிலும் பங்கு மூலதனம் உண்டு.

## (6) வர்த்தகத் திணைக்களம் (DEPARTMENT OF COMMERCE)

1) வர்த்தகக் கொள்கை, வர்த்தக மேம்பாடு என்பவற்றுக்கான அரச முகவர் அமைப்பு
2) உள்நாட்டு வர்த்தகக் கொள்கை குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்கும் நிறுவனம்
3) வர்த்தகப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு உடன் படிக்கை செய்தல் உ+ம்; பாங்கொக் உடன்படிக்கை
4) சர்வதேச வர்த்தகக் கண்காட்சிகளில் நிறுவனங்கள் பங்குபற்ற ஏற்பாடு
5) இலங்கை ஏற்றுமதிகளுக்கான சந்தை ஆய்வுகளை மேற்கொள்ளல்

## (7) பண்டக் கொள்வனவுத் திணைக்களம்
( DEPARTMENT OF COMMODITY PURCHASE)

1) இறப்பர் சிறுதோட்ட உடமையாளரின் சந்தைப்படுத்தும் அமைப்பு
2) இயற்கை இறப்பர் ஏற்றுமதிக்கான உத்தரவுப் பத்திரம் வழங்கும்
3) 1977க்கு முன் இலங்கை– சீனா இறப்பர் அரிசி ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) கொள்வனவு நிலையங்கள் மூலம் இறப்பரைக் கொள்வனவு செய்து ஏற்றுமதி செய்யும்.
5) இறப்பர் பதப்படுத்தலுக்கான பொருட்களை உற்பத்தியாளருக்கு வழங்கும்.

## (8) சந்தைப்படுத்தல் அபிவிருத்தித் திணைக்களம்
(DEPARTMENT FOR THE DEVELOPMENT OF MARKETING)

1) அரச கொள்கைகளுக்கமைய விவசாயப் பொருட்களை சந்தைப்படுத்தும் நிறுவனம்
2) மரக்கறி உப தானியங்களின் விநியோக நடுவராக இருந்து உற்பத்தியாளருக்கு உயர்ந்த விலை கிடைக்கச் செய்தல்
3) உற்பத்தி இடங்கள் சந்தைகளுக்கிடையே போக்குவரத்துக்கு வாகன சேவை வழங்கும்.
4) மக்கள் கடைகள் என்ற சில்லறை நிலையங்களைத் தொழில்ப்படுத்தல்
5) தாங்கிருப்புக்களை வைத்திருந்து பொருள் தட்டுப்பாடு, விலை உயர்வு வீழ்ச்சிகளைத் தவிர்க்கின்றது.
6) தகரத்திலடைக்கும் தொழிற்சாலைகளை நடாத்த வரையறுத்த லங்கா கன்றீஸ் கம்பனியை இயக்குகின்றது.

## (9) அரசாங்க வழங்கல் திணைக்களம்
(GOVERNMENT SUPPLIES DEPARTMENT)

1) அரசாங்க நிறுவனங்களின் பாவனைக்கான பொருள்களை விநியோகிக்கும், பராமரிக்கும் அமைப்பு
2) மோட்டார் வாகனங்களை வழங்கல்
3) பாவனைக்கு ஒவ்வாத வாகனங்களைப் பொறுப்பேற்றல்
4) பாவனை செய்ய முடியாத வாகனங்களை ஏலத்தில் விற்பனை செய்தல்
5) வெடிமருந்துப் பொருள்களைக் களஞ்சியப்படுத்தும்

## (10) இலங்கை ஏற்றுமதிக்கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
(SRILANKA EXPORT CREDIT INSURANCE CORPORATION)

1) ஏற்றுமதி அபிவிருத்திக்கு போதிய நிதியின்மையால் ஏற்படக் கூடிய இடர்களை நீக்குவதற்கான அமைப்பு
2) தொழிற்பாடுகளை 1979ல் ஆரம்பித்தது
3) பிற நாட்டு கொள்வனவாளர்களிடம் இருந்து பணம் பெறாதிருக்கக் கூடிய நிலமையை நீக்குதலை குறிக்கோளாகக் கொண்டது.
4) இலங்கை மத்திய வங்கி, இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மூலதனப் பங்களிப்புச் செய்துள்ளன.
5) காப்புறுதிச் சேவை, கடன் உத்தரவாத சேவை என்ற இருபிரதான தொழிற்பாடுகளில் ஈடுபடல்
6) வருமதிக் கடன்களை பெறத்தாமதமாதல், பெற முடியாது போதலுக்கு காப்புறுதி வசதிகளை வழங்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) வியாபார காரண இடர்களுக்கு 80% வியாபார மற்ற காரண இடர்களுக்கு 85% இழப்பீடு வழங்கும்.

8) ஏற்றுமதிக்குமுன், ஏற்றுமதிக்குப் பின்னரான கடன் உத்தரவாதங்களை வழங்கிக் கடன் பெறும் இயலுமையை அதிகரிக்கும்.

## (11) நியாய வியாபார ஆணைக்குழு (FAIR TRADING COMMISSION)

1) தேசிய விலைகள் ஆணைக்குழுவின் கருமங்களுக்காக அமைக்கப்பட்டது.

2) தனியுரிமை, இணைப்புக்கள், போட்டித் தன்மைக்கெதிரானநடைமுறைகள் என்பவற்றைக் கட்டுப்படுத்தல்களை மேலதிகமாக நிறைவேற்றும்.

3) போட்டிச் சூழ்நிலையால் உற்பத்தித்திறன் அதிகரித்துபொருளாதார, வாழ்க்கைத் தர உயர்வுக்கு உதவுதலைக் குறிக்கோளாகக் கொண்டது.

4) விசாரணைக்கு சமூகமளிக்கச் செய்தல், விசாரணை செய்தல், தண்டனை வழங்கல் போன்ற நீதிமன்றக் கருமங்களை அதிகாரமாகக் கொண்ட அமைப்பு

5) பொருட்களின் விலைகளை நிர்ணயித்தல், பரிசீலனை செய்து மாற்றி அமைத்தல் விலை விடயங்களை ஆய்வு செய்து பொருத்தமானவர்க்கு (அமைச்சர்) அறிக்கை சமர்ப்பித்தல்

6) தரமாக நியாய விலைகளில் போதுமான அளவு பொருள் கிடைப்பதை உறுதி செய்யும்.

## (12) உள்ளக வியாபாரத் திணைக்களம் (DEPARTMENT OF INTERNAL TRADE)

1) நுகர்வோர் நலன்களைச்சட்டம், நிறுவனரீதியாக பாதுகாப்பதற்கான அமைப்பு

2) நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்துடன் விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம், நிறை அளவைகள் சட்டத்தை அமுல் படுத்தல்

3) நுகர்வோர் மட்டுமன்றி விற்பனையாளர், தயாரிப்பாளர் தாம் கொள்வனவு செய்த பொருள்களின் குறைபாடுகளை முறையீடு செய்யலாம்.

4) உள்ளக வியாபார ஆணையாளர் உயர் அதிகாரி, மாவட்டங்களில் உதவி உள்ளக வியாபார ஆணையாளர் உயர் அதிகாரி

5) நுகர்வோர் பாதுகாப்புச் சங்கங்களை கிராம அலுவலர் பிரிவில் உள்ளக வியாபாரப் பரிசோதகர் மூலம் அமைக்கும்.

6) நுகர்வோர் பாதுகாப்பு நிதியத்தை பராமரித்தல்

7) நுகர்வோர் அறிவாற்றலை வளர்க்க மகா பொல சந்தை மூலம் நுகர்வோர் கல்வித்திட்டத்தை நடாத்தும்

8) மெட்றிக் அளவு முறையை அமுல்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(13) கம்பனிப் பதிவாளர் திணைக்களம்
( DEPARTMENT OF THE REGISTAR OF COMPANIES)

1) தொழில் நிறுவனங்களின் பதிவுகளுக்கு அனுமதிக்கும் நிறுவனம்
2) கம்பனிகள் சட்டம் மட்டுமன்றி சீட்டுக் கட்டளைச் சட்டம், வியாபார பெயர்கள் கட்டளைச்சட்டம், சங்கங்கள் கட்டளைச் சட்டங்களை நிர்வகிக்கின்றது.
3) சங்கங்கள், கம்பனிகள் என்பவற்றின் கணக்காய்வாளர்களைப் பதிவு செய்யும்
4) பங்குடமை ஒப்பந்தங்களைப் பதிவு செய்து "உறுதி" அந்தஸ்தை ஏற்படுத்தும்.
5) முதலீட்டாளர் நலன்களைப் பாதுகாக்க இலங்கைக் கம்பனிப்பதிவாளர் திணைக்களம் சில விசேட அதிகாரங்களையும் கொண்டது. (கணக்காய்வாளரை நியமித்தல் )

(14) உரிமைக் காப்பு வியாபாரக் குறிகள் பதிவாளர் திணைக்களம்
( DEPARTMENT OF REGISTAR OF PATENTS & TRADE MARK)

1) அறிவு சார் (ஆய்வதிவாளர்) உடமைகளை அபிவிருத்தி செய்தற்கான அமைப்பு
2) புலமைச் சொத்துக் கோவைச் சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனம்.
3) கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தின் பிரிவாக 1982 இன் பின் இயங்குகின்றது.
4) ஆக்கவுரிமை, பதிப்புரிமை, வியாபாரக் குறி மட்டுமன்றி வடிவமைப்புக்களையும் பதிவு செய்யும். கலை விஞ்ஞானஆக்கங்களை முன்னேற்றிப்பாதுகாப்பதைக் கடமையாகக் கொண்டது.

(15) தேசிய பொதிகட்டல் நிலையம் (NATIONAL PACKAGING CENTRE)

1) பொதியிடல் அபிவிருத்திக்கான அரசகம்பனியாக 1983ல் அமைக்கப் பட்டது.
2) விஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சிநிலையம், இலங்கைக் கட்டளைகள் நிறுவகம், இலங்கைப் பொதி கட்டல் நிலையம் என்பன பங்காளர்களாக உள்ளன.
3) பொதி கட்டல் ஆலோசனை, தொழில் நுட்பத் தகவல்கள் வழங்கும்.
4) பொதி கட்டல் வடிவமைப்புக்களை வரையறுத்து மாதிரிகளை அறிமுகம் செய்து கண்காட்சிகளை ஒழுங்கு செய்யும்
5) பொதி கட்டலுக்கான பயிற்சி, ஆராய்ச்சிப் பணிகளுக்கு உதவும்.

(16) தேசிய வடிவமைப்புக் கழகம் ( NATIONAL DESIGN CENTRE)

1) கைத்தொழில் வடிவமைப்புக்களை அபிவிருத்தி செய்வதற்கான அமைப்பு
2) புதிய வடிவமைப்புக்கான ஆராய்ச்சிகளில் ஈடுபடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) வடிவமைப்புத் தொடர்பாக தொழில்நுட்பத் தகவல்கள், ஆலோசனை களை வழங்கும்
4) கைப்பணியாளருக்கு கடன் வசதிக்கு ஏற்பாடு செய்யும்
5) கைப்பணிப் பொருள்சபை, தேசிய கைவேலைகள் கழகம் என்பன மூலம் கைப்பணியாளருக்கு உதவும்.

## (17) இலங்கைக் கட்டளைகள் நிறுவனம்
## ( SRILANKA STANDARDS INSTITUTION)

1) உச்சத் திருப்தி தரும் திறன் வாய்ந்த பண்டங்களின் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான அமைப்பு
2) 1964ம் ஆண்டின் இலங்கைக் கட்டளைகள் பணியகச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது.
3) தரக் கட்டளைகள் (தர நியமங்கள்) வரையறுத்துக் கண்காணிக்கும்.
4) கட்டளைகள் விபரக் கூற்றை பொதுமக்களிடம் பெற்றுத்தர நியமங்களை வரையறுக்கும்.
5) கைத்தொழிலாளர் வேண்டுதலுக்கமைய பொருள்களைப் பரிசோதனை செய்து தரக்குறிகளைப் பயன்படுத்த தரச் சான்றிதழை வழங்கும்.
6) ஏற்றுமதிப் பரிசோதனை, இறக்குமதிப் பரிசோதனை, தொழிற்சாலைப் பரிசோதனைத் திட்டங்களை அமுல்படுத்தும்.
7) தரப் பரிசோதனைக்கான ஆய்வு கூட வசதிகளை வழங்கும்.
8) நுகர்வோர் செய்தி எனும் காலாண்டு சஞ்சிகை மூலம் தகவல் வழங்கும்.

## (18) இலங்கை விஞ்ஞானக் கைத்தொழில் ஆராய்ச்சி நிலையம்
## ( CEYLON INSTITUTE OF SCIENTIFIC & INDUSTRIAL RESEARCH)

1) கைத்தொழில்களில் விஞ்ஞான தொழில் நுட்ப அறிவை விருத்தி செய்தற்கான நிறுவனமாக 1955ல் ஆரம்பம்.
2) மூலப் பொருள், முடிவுப் பொருள் பரிசோதனைகளுக்கான ஆய்வு கூட வசதிகள் வழங்கும்.
3) சூழலுக்குப் பொருத்தமான தொழில்நுட்ப முறைகளை அறிமுகம் செய்து பின்பற்ற ஆலோசனை வழங்கும்
4) நியமத் (தரம்) கட்டளைகளை முறைமைப்படுத்தல்
5) தொழில் நுட்பத் தகவல்களை சேகரித்து தொகுத்து பகிர்வு செய்தல்.

## (19) இலங்கை சிறு கைத்தொழில் கழகம்
## ( SRILANKA CHAMBER OF SMALL INDUSTRIES)

1) சிறு கைத்தொழில் அபிவிருத்திக்கான அமைப்பு
2) சிறு கைத்தொழிலாளர்களை அங்கத்தவர்களாகக் கொண்டது.
3) வரிமுறை நயக்கேடுகளில் இருந்து நிவாரணம் பெற அரசுடன்பேரம் பேசல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்த பொருட்காட்சிகளை ஒழுங்கு செய்தல்

5) சிறு கைத்தொழில் அபிவிருத்திக்கான உதவி, ஊக்குவிப்புக்களை பெற்றுக் கொடுத்தல்

## (20) இலங்கை வணிகக் கழகம் (CEYLON CHAMBER OF COMMERCE)

1) தொழில் துறையைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்வதை குறிக்கோளாகக் கொண்ட கழகம்

2) இலங்கைத் தொழில்துறை முயற்சிகளை அங்கத்தவராகக் கொண்டு 1839ல் ஆரம்பம்

3) வர்த்தகச் சட்டம் விதிமுறை, வரிமுறைகளை வகுக்க அரசுக்கு ஆலோசனை வழங்கல்

4) ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் இணைந்து தொழிற்படல் உ+ம் ஜனாதிபதி விருது பெறுவோரைத் தெரிவு செய்தல்

5) அங்கத்தவர்களுக்கு வர்த்தக நடைமுறைகள் விதிகள் தொடர்பாக அறிவூட்டல்

6) ஏல விற்பனைகளை நடாத்தல், உற்பத்தி நாட்டுச் சான்றிதழ் வழங்கல் ஆகிய பணிகளிலும் ஈடுபடல்.

## (21) தேசிய வணிகக் கழகம் ( NATIONAL CHAMBER OF COMMERCE )

1) தேசிய பொருளாதார அபிவிருத்திக்காக இணைக்கப்பட்டசங்கம்

2) 1955ல் கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்து இலங்கையர்களை மட்டும் அங்கத்தவராகக் கொண்ட அமைப்பு

3) அங்கத்தவர்களுக்கு தேசிய அபிவிருத்தி நோக்கில் அக்கறையை விருத்தி செய்யத் தகவல் ஊட்டல்

4) பிணக்குகளைத் தீர்த்து தொடர்ச்சியான தொழில் உறவுகளை ஊக்குவித்தல்

## (22) கைத்தொழில் அபிவிருத்திக் கழகம் (INDUSTRIAL DEVELOPEMENT COUNCIL)

| | |
|---|---|
| **குறிக்கோள்** | சீரான கைத்தொழில் கொள்கைகளைக் கடைப்பிடிக்கச் செய்ய 1987ல் ஆரம்பம். |
| **சிபார்சு-** | உலக வங்கி, உதவு குழுமன்றம் வேண்டுதல். |
| **தலைவர்-** | ஜனாதிபதி |
| **உறுப்பினர்கள்** | (அமைச்சர்கள்) இளைஞர் விவகாரம், புடவை, கிராமிய, விஞ்ஞானக் கைத்தொழில் |
| **ஆலோசகர்கள்** | தனியார் துறை நிறுவனங்களின் பிரதிநிதிகள்(3) ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, இலங்கை முதலீட்டு சபை, இலங்கை வியாபார அபிவிருத்தி நிலையம், உள்நாட்டு முதலீட்டு ஆலோசனைக் குழு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (23) கைத்தொழில் அபிவிருத்திச்சபை (INDUSTRIAL DEVELOPMENT BOARD)

**குறிக்கோள்** – சிறு கைத்தொழில்களை ஊக்குவித்து மேம்படுத்தி உள்நாட்டு வளங்களின் பயன்பாட்டை அதிகரித்தல்

**தொழில்நுட்ப சேவைகள்**

1) தரக்கட்டுப்பாட்டு ஆலோசனை
2) தரப் பரிசோதனைக்கான ஆய்வுகூட வசதிகள்
3) பொறிகளை நிறுவுதல், உற்பத்தித்தள அமைப்பு வசதிகள்

**தகவல் சேவைகள்**

1) நூலகம் 2) அலுவலகங்களின் தகவல் 3) ஆலோசனைகள்
4) பிரசுரங்கள் 5) கறுமாந்த சஞ்சிகை

**பொதுச் சேவைகள்**

1) கைத்தொழில் பேட்டைகளை நிர்வகித்தல்
2) மாதிரிச் சிறுகைத்தொழில்களை நிறுவி வழிகாட்டல்
3) நவீன இயந்திரங்கள் உற்பத்தி முறைகளை அறிமுகம் செய்தல்
4) மூலப் பொருள்கள், பொறிகளைப் பெற ஏற்பாடு செய்தல்
5) நிதி ஸ்தாபனங்களிடம் கடன் பெறச்சிபார்சு செய்தல்
6) ஏற்றுமதிக்கான கட்டளைகளைப் பெற்றுக் கொடுத்தல்

## (24) இலங்கை வியாபார அபிவிருத்தி நிலையம்

(SRI LANKA BUSINESS DEVELOPMENT CENTRE)

தனியார் துறைத் தொழில் முயற்சிகளின் வளர்ச்சி கருதி ஐக்கிய அமெரிக்க உதவியுடன் 1984ல் நிறுவப்பட்டது.

**தொழிற்பாடுகள்**

1) முகாமை அபிவிருத்திக்கான ஆலோசனை வழங்கல்
2) கருத்தரங்குகள், பயிற்சித்திட்டங்களை செயற்படுத்தல்
3) நிறுவன இலாப, நிதிநிலமைகளை முதலீட்டாளருக்காகப் பிரசித்தப்படுத்தல்
4) அரசுடன் தனியார் இணைந்து முதலீடு செய்வதை ஊக்குவித்தல்
5) கணணிப் பாவனையை விருத்தி செய்தல்

## (25) தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம்

(NATIONAL INSTITUTE OF BUSINESS MANAGEMENT)

1) முகாமை அபிவிருத்தி வியாபார நிலையமாக 1968ல் ஆரம்பம்
2) தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனமாக 1972ல் மாற்றம்
3) நியதிச் சட்ட சபையாக 1976ல் பிரகடனம்
4) சர்வதேச தொழிலாளர் தாபனம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட உதவிக்ள் மேற்பார்வை

**தொழிற்பாடுகள்**

1) முகாமைப் பயிற்சிக்கான பாட நெறிகளை அறிமுகம் செய்தல்
2) பாட நெறிகளுக்கான முகாமைச் செயற்பாடுகளை ஆய்வு செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) நடை முறையிலுள்ள முகாமைச் செயற்பாடுகளை ஆய்வு செய்தல்
4) அரச, தனியார் துறை முகாமையாளர்களுக்கு பயிற்சி அளித்தல்
5) மேற்பார்வையாளர்களைப் பயிற்றுவித்தல்

## (26) கூட்டுறவு முகாமைச் சேவைகள் நிலையம்

## ( CO- OPERATIVE MANAGEMENT SERVICE CENTRE )

1) கூட்டுறவு முறைக்குப் பொருத்தமான முகாமைத் தொழிற்பாடு மூலம் கூடிய வினைத்திறனை ஏற்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்ட அமைப்பு
2) அரச வர்த்தகக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் வர்த்தகமானி அறிவித்தலின்படி 1973ல் ஆரம்பம்

### தொழிற்பாடுகள்

1) கூட்டுறவு முறைக்குப் பொருத்தமான முகாமைப் பயிற்சிகளை அறிமுகம் செய்தல்
2) முகாமை முறைகளை அறிமுகம் செய்து நடைமுறைப்படுத்தல்
3) நடைமுறையிலுள்ள முகாமைக் குறைபாடுகள் முன்னேற்றங்களை மதிப்பிடல்/ ஆய்வு செய்தல்
4) முகாமைத்துவப் பயிற்சி அளித்து கல்வி அறிவையும் ஊட்டல்
5) விவசாயம், கைத்தொழில் பாவணையாளர் முகாமைக் கணக்கியல் என்ற பிரிவுகளாகி கருத்தரங்குகள் ஆலோசனைகளை வழங்கும்.

## (27) தேசிய கூட்டுறவுச் சபை (NATIONAL CO-OPERATIVE COUNCIL)

1) கூட்டுறவுக் கொள்கைகளை பிரபல்யப்படுத்தி தேசிய ரீதியாக கூட்டுறவுச் சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தலைக் குறிக்கோளாகக் கொண்டது.
2) அகில இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனம் எனக் கூட்டுறவுப் புனரமைப்புக்கு முன் அழைக்கப்பட்டது.
3) கூட்டுறவுச் சங்கங்களின் உச்சி மட்ட நிறுவனமாக 1972ல் இருந்து இயங்குகின்றது.
4) கூட்டுறவுச் சங்கங்களை அங்கத்தவராகக் கொண்டது

### தொழிற்பாடுகள்

1) கூட்டுறவுக் கொள்கைகளை நவீனமயப்படுத்திப் பாதுகாத்தல்
2) கூட்டுறவுச் சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி அரசுடன் பேரம்பேசல்
3) கருத்தரங்குகள், ஆலோசனைகள் மூலம் அறிவூட்டல்
4) சர்வதேச கூட்டுறவு அமைப்பு மகா நாடுகளில் பங்குபற்றி நவீனமயப்படுத்தல்
5) கூட்டுறவு முகாமைச் சேவைகள் நிலையத்துடன் இணைந்து புதிய திட்டங்களை வகுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(28) இலங்கை துறைமுக அதிகார சபை (SRI LANKA PORTS AUTHORITY)

1) துறைமுகங்களின் நிர்வாகத்திற்குப் பொறுப்பான அரச அமையம்
2) துறைமுக ஆணைக்குழு, துறைமுக சரக்குக் கூட்டுத்தாபனம், துறைமுக ஒத்துப்பார்த்தல் பாதுகாப்புச் சேவைக் கூட்டுத்தாபனம் இணைக்கப்பட்டு இந்நிறுவனம் அமைக்கப்பட்டது.
3) கப்பல் போக்கு வரத்துமுறையை பொருளாதார அபிவிருத்தி கருதி வசதிப்படுத்த இணைக்கப்பட்டது.
4) துணைச் சேவைகளுக்கு கம்பனிகளில் முதலீடு செய்துள்ளது.
உ+ம் கொழும்பு உலர் தளக் கம்பனி

**தொழிற்பாடுகள்**

1) துறைமுகப்பகுதிக்கு பாதுகாப்பளித்தல்
2) துறைமுகத்தளங்களை அமைத்து புனரமைத்துப் பராமரித்தல்
3) பொருள்களை ஏற்ற இறக்க கருவி உபகரணங்களை வழங்கல்
4) பொருள்கள், பயணிகளை பரிசோதித்து அனுமதித்தல்
5) பயணநேரங்கள்,கப்பல்களின் வருகை தொடர்பாக தகவல் வழங்கல்.
6) பயணிகள்,பொருள்களுக்கான களஞ்சிய வசதி வழங்கல்

(29) வரையறுத்த இலங்கைக் கப்பல்போக்குவரத்துகள் கம்பனி (CEYLON SHIPPING CO LTD)

1) இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனமாக 1971ல் அமைக்கப்பட்டு 1992 கம்பனியாக்கப்பட்டது.
2) கப்பல்களை உடமையாகக் கொண்டிருப்பதுடன் கடல் போக்கு வரத்துக்கான முகவராகவும் இயங்கும்

**தொழிற்பாடுகள்**

1) கப்பல் தொகுதியொன்றை வைத்திருந்து சேவைகளை வழங்கி அன்னியச் செலாவணியை உழைத்தல்.
2) சாதகமான நிபந்தனைகளின் கீழ் சேவை வழங்க வெளிநாட்டுக் கப்பல்களை வாடகைக்கமர்த்தல்
3) வெளிநாட்டுக்கப்பல் கம்பனிகளின் முகவராக இருத்தல்
4) தரகராக, முகவராக சொந்தக்காரராக கப்பல் சேவைகளை சர்வதேச வர்த்தக அபிவிருத்திக்கு வசதியாக வழங்கல்
5) கப்பல் மாநாடுகளில் பங்கு பற்றி சாதகமான கப்பல் கேள்வுகளை வகுத்தல்
6) உப சேவைகளுக்காக துணைக்கம்பனிகளை ஸ்தாபித்து நிர்வகித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(30) வரையறுத்த கொழும்பு கப்பல் தளக்கம்பனி

(COLOMBO DOCKYARD LTD)

முழுமையாக இலங்கைக் கப்பல் போக்குவரத்துகள்கள் கம்பனி முதலீடு செய்த பிரதான துணைக்கம்பனி

**தொழிற்பாடுகள்**

1) பெரியளவிலான மீன்பிடிக்கப்பல்கள் இயந்திரப் படகுகளைக் கட்டுதல்
2) புதிய உலர் கப்பல் திருத்தும் தளத்தை அமைத்தல்
3) பூரணமான கப்பல் திருத்தும் சேவையை நடத்தல்
4) கப்பல் படைக்கு கப்பல்களைக் கட்டி வழங்குவதுடன் கருவிகள், சாதனங்கள் விற்பனை நிலையத்தையும் இயக்குகின்றது.

(31) சிலோன் சிப்பிங் லைன்ஸ் லிமிட்டெட்

இலங்கைக் கப்பல் வழிகள் கம்பன (CEYLON SHIPPING LINES LTD)

1) கப்பல் கூட்டுத்தாபனத்தின் துணைக்கம்பனி
2) சிலோன் போர்ட் சேர்விஸ் லிமிடெட், சீலயன் எக்ஸ்பிறஸ் சேர்விஸ் லிமிடெட் என்பவற்றின் தாய்க்கம்பனி
3) கொழும்பு, பம்பாய், கராச்சித் துறைமுகங்களுக்கான கப்பல் சேவையில் ஈடுபடல்
4) கரையோரக் கப்பல் சேவையை இலங்கைத் துறைமுகங்களுக்கிடையே நடாத்தல்
5) தீர்வையற்ற கடைத்தொகுதிகளை நிர்வகிப்பதுடன் ஐயாட்டா நிறுவன அனுமதி பெற்ற விமானப் பயணச்சீட்டு முகவராகவும் இயங்குகின்றது.

(32) சிலோன் போர்ட் சேர்விசஸ் லிமிட்டெட்

இலங்கைத் துறைமுக சேவைகள் கம்பனி

(CEYLON PORT SERVICES LTD)

1) இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனம் சிலோன் சிப்பிங் லைன்ஸ் லிமிற்றெட் என்பவற்றின் துணைக் கம்பனி
2) மாலுமிகளுக்கு உணவு, கப்பல்களுக்கு நீர், விநியோகத்தில் ஈடுபடுதல் பிரதான தொழிற்பாடு
3) வெளிநாட்டுக் கப்பல்கள், தூதராலய ஊழியர்கட்கு பிணைக்கப்பட்ட களஞ்சிய வசதி வழங்கும்

(33) வரையறுத்த இலங்கைத் தாங்கிகள் கம்பனி

(LANKA TANKERS LTD)

1) இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனங்களின் துணைக் கம்பனி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) பெற்றோலிய இறக்குமதி, இடநகர்த்தலில் ஈடுபடும் கம்பனி
3) முகவர்கள் சேவைகளில் ஈடுபடும் நிறுவனம்

## (34) கொழும்பு டிறைடொக்ஸ் லிமிடெட் (COLOMBO DRY DOCKS LTD)

1) கப்பல் சேவைக்கான பொறியியல் சேவைகளை வழங்கும் நிறுவனம்
2) கொழும்பு டொக்யாட்ஸ் லிமிட்டெட், துறைமுக அதிகார சபை, தேசிய அபிவிருத்தி வங்கி, ஊழியர் நம்பிக்கை நிதியம் பொதுமக்களின் மூலதனப் பங்களிப்பு
3) கப்பல்கள் கட்டுதல், பழுதுபார்த்தல், உலர் மேடை வசதிகளைவழங்குதல்
4) பழுதுபார்த்தலுக்கான கருவிகளை வழங்குதல

## (35) வாணிக கப்பற்போக்குவரத்துத் திணைக்களம்

(MERCHANT SHIPPING DIVISION)

1) கப்பல் போக்குவரத்து நடவடிக்கைககளை மேற்பார்வை செய்து நிர்வகிக்கும் பிரிவு
2) கப்பல் போக்குவரத்து உடன்படிக்கைகளை அமுல்படுத்தும் பிரிவு
3) கப்பல் சட்டங்களை நடைமுறைப்படுத்தல் கப்பல், பணிபுரிபவர்களைத் தேர்ந்தெடுத்தல், பயிற்சி அளித்தல், கப்பல்களைப் பதிவு செய்தல் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும்
4) இலங்கைக் கொடியின் கீழ் பதிவு செய்தல் வேலைக்கமர்த்தல் மூலம் அன்னியச் செலாவணி நிரம்பலை அதிகரித்தல்

## (36) இலங்கை மத்திய கேள்வுப் பணியகம்

(CENTRAL FREIGHT BUREAU OF SHRI LANKA)

1) மத்திய கேள்வுப் பணியகச் சட்டத்தினால் 1973ல் அமைக்கப்பட்டது.
2) கப்பல் ஏற்றல் நிர்வாகசபை/ கப்பல் இட ஒதுக்கல் மத்திய செயலகம் என முன்னர் அழைக்கப்பட்டது
3) வினைத்திறமையுடைய துறைமுக சேவைமூலம் கப்பல் கிரயங்களை இழிவு படுத்தல் நோக்கமானது.

### தொழிற்பாடுகள்

1) கப்பல் முகவர்களைப் பதிவு செய்தல்
2) கப்பல் சுமைத்திட்டத்திற்கு ஏற்ப சரக்கு சேகரித்தல்
3) கப்பல் மாநாடுகளில் பங்குபற்றி கட்டணங்களை இழிவுபடுத்தல்
4) சலுகைக்கேள்வு வீதங்களில் சிறிய ஏற்றுமதியாளர் சரக்கேற்ற பேரம்பேசல்
5) கப்பல் வசதிகளைப் பெறுதற்கான தகவல் ஆலோசனை வழங்கல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (37) வரையறுத்த இலங்கை விமானத்தள விமானசேவைகள் கம்பனி
(AIRPORT & AVIATION SERVICES (SHRI LANKA ) LTD)

1) விமானத்தள நிர்வாகத்திற்கான அரச அமைப்பு
2) விமானப் போக்குவரத்துத் திணைக்களம், விமானத்தள அதிகார சபை என முன்னர் அழைக்கப்பட்டது.

### தொழிற்பாடுகள்

1) விமானத்தளங்களை அமைத்துப் புனரமைத்துப் பராமரித்தல்
2) விமானத்தளப்பகுதிக்கு பாதுகாப்பளித்தல்
3) பொருள்களை ஏற்ற, இறக்ககருவி, உபகரண வசதி வழங்கல்
4) பொருள்கள், பயணிகளைப் பரிசோதித்து அனுமதித்தல்
5) தீயணைப்பு வசதி, தீர்வையற்ற கடை நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருத்தல்
6) பயணிகள்,பொருள்களுக்கான களஞ்சிய வசதி வழங்கல்

## (38) இலங்கை மோட்டார் போக்குவரத்துக்கழகம்
( AUTOMOBILE ASSOCIATION OF SRI LANKA )

1) மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரமுடையோரை அங்கத்தவராகக் கொண்ட சங்கம்
2) இலங்கையின் பெருந்தெருக்களில் இயங்கும் மோட்டார் வாகன உரிமையாளர் நலன்களைக் கண்காணித்துப் பாதுகாத்தல் பிரதான நோக்கமானது.

### தொழிற்பாடுகள்

1) பாதை,பாலங்களின் நிலவரங்களைப் பொதுமக்கள், சாரதிகளுக்குத் தெரியப்படுத்தல்
2) விபத்தை உருவாக்கும் மார்க்கங்கள் தொடர்பாக பெருந்தெருக்கள் பிரிவுக்கு அறிக்கை யிடல்
3) போக்குவரத்துப் பொலிசார் சேவைகளுக்கு உதவுதல்
4) பெருந்தெருக்களின் குறைபாடுகளை அரசு/வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு தெரியப்படுத்தல்
5) சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதுடன் வாகன அனுமதிப் பத்திரக்கட்டண நிர்ணயங்களில் தலையிடுதல்
6) வழங்கல் திணைக்கள வாகன விற்பனைக்கான விலை மதிப்பீடு செய்தல்
7) அரச அலுவலர் வாகனக்கடன் கொள்வனவிற்கு பெறுமான மதிப்பீடு செய்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (39) மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்

(DEPARTMENT OF MOTOR TRAFFIC)

1) மோட்டார் வாகன நிர்வாகத்திற்குப் பொறுப்பான அரச அமைப்பு
2) அரசாங்க செயலகங்களில் பிரதேச அலுவலகங்களையும் கொழும்பில் தலைமை அலுவலகத்தையும் கொண்டது.

தொழிற்பாடுகள்

1) வாகனங்களைப் பரிசோதித்து பதிவு செய்தல்
2) வாகனங்களின் உரிமைப்பதிவேடுகளைப் பராமரித்தல்
3) வாகனங்களின் உரிமை மாற்றப் பதிவுகளை மேற்கொள்ளல்
4) ஆண்டுக்கான வாகன அனுமதிப்பத்திரம் வழங்கல்
5) சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கல்
6) சாரதி பயிற்சி நிலையங்களைப் பதிவு செய்து அனுமதித்தல்

## (40) தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

(NATIONAL TRANSPORT COMMISSION)

1) பயணிகள் போக்குவரத்து ஒழுங்குபடுத்தல் அபிவிருத்திக்கான பிரிவு
2) போக்குவரத்து அமைச்சினால் நியமனம் செய்யும் (5) பிரதிநிதிகள், அரச பிரதிநிதிகள் (3) கொண்டது.

தொழிற்பாடுகள்

1) போக்குவரத்து அனுமதிப்பத்திரம் வழங்கலுக்கான நியதிகளை வகுத்தல
2) சாரதிகள், வாகனங்களின் தகமைகளை வரையறுத்தல்
3) அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் கட்டணங்களை வரையறுத்தல்
4) சகல பாதைகளிலும் அவசியமான சேவைகள் வழங்குதலை உறுதிப்படுத்தல்
5) போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுவோருக்கு ஆலோசனை வழங்கல்

## (41) இலங்கை முதலீட்டுச் சபை

(BOARD OF INVESTMENT OF SHRI LANKA)

1) பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு, வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக்குழு இணைந்த அமைப்பு
2) ஏற்றுமதிப் பதனிடல் பிரதேசம் உட்பட வெளிநாட்டு முதலீடுகளுக்கு அனுமதிக்கும் நிறுவனம்
3) நாடுகளுடன் முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தங்களை ஏற்படுத்தும் அமையம்
4) எற்றுமதிப் பதனிடல் பிரதேசத்திற்கு ஆரம்ப வசதிகளை ஏற்படுத்தல்
5) சிறப்பான விதிகளின் கீழ் தொழில் உறவுகளைப் பாதுகாத்து தொழில் பிணக்குகளைத் தீர்த்தல்
6) கொழும்புக்கு அண்மையில் உள்ள நகரங்களையும் அபிவிருத்தி செய்யும்
7) முதலீட்டாளருக்கு சலுகைகள் வரி நிவாரணங்களை அனுமதித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 வருடங்களுக்கு குறையாத 15 வருடங்களுக்கு மேற்படாத வரிவிடுதலை/ மேலதிக 15 வருட வரிச்சலுகை / வெளியீடுகளில் ஒருபகுதியை உள் நாட்டில் விற்றல்

(42) கடன் தகவல் நிலையம் (CREDIT INFORMATION BUREAU)

1) சகல துறைகள் தொழில் முயற்களுக்கு கடன் வழங்குவதை வசதிப்படுத்தல் அமைப்பு
2) கடன் பெறுனர் விபரங்களைச் சேகரித்து நிதி நிறுவனங்கட்கு வழங்கும்
3) கடன் தகவல் மத்திய நிலையச் சட்டத்தின் கீழ் 1990ல் அமைக்கப்பட்டுச் செயற்படல்
4) மத்திய வங்கி, வர்த்தக வங்கிகள், அபிவிருத்தி வங்கிகள், தேசியசேமிப்பு வங்கி, நிதிக்கம்பனிகள் மூலதனப் பங்களிப்பு

(43) வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
(FOREIGN EMPLOYMENT BUREAU)

1) நியாயமான வெளிநாட்டு வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தி அபிவிருத்தி செய்யும் அமைப்பு
2) தொழில் முகவர் நிலையங்களை பதிவு செய்து மேற்பார்வை செய்தல்
3) வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை அதிகரிக்க அதிகாரிகள், முகவர்கள், உடமையாளர்களுடன் பேரம் பேசி உடன்படிக்கை செய்தல்
4) வெளிநாட்டு வேலைவாய்ப்பு விபரங்களைப் பெற தகவல் வங்கியைப் பராமரித்தல்
5) தொழிலாளர் நலன் நிதியத்தை பிறநாடுகளில் வேலை பெற்ற இலங்கையருக்காகப் பேணல்
6) தொழிலாளருக்கு நாடு திரும்புகையில் புனர்வாழ்வுத் திட்டங்களைச் செயற்படுத்தல்

(44) இலங்கை போறெக்ஸ் கழகம் (FOREX CLUB OF SRILANKA)

1) அன்னியச் செலாவணி தொழில் துறையைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்வதற்கான ஒரு நலன் புரிச் சங்கம்
2) அன்னியச் செலாவணியில் செயலாற்றும் வங்கிகள், தரகர்களை அங்கத்தவராகக் கொண்டது.
3) பணச் சந்தைக் கூடாக அன்னியச் செலாவணிகொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவோரை பிறநாட்டு நிறவனங்களுடன் இணைக்கும்
4) கூட்டங்கள், கருத்தரங்குகள் சமூக கலாச்சார நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்யும்

(45) வரையறுத்த கொழும்பு சரக்குமுதல் பரிவர்த்தனைக் கம்பனி
(COLOMBO STOCK EXCHANGE (G.T.E.) LIMITED)

1) பங்குச் சந்தையைத் தொழில்படுத்தும் அமைப்பு
2) 1985ல் நிறுவப்பட்ட ஆவணங்கள் பரிவர்த்தனைக் கம்பனிக்காக 1990ல் அமைக்கப்படல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) நான்கு பிணைகள் பரிவர்த்தனை ஆணைக்குழுஉறுப்பினர் ஐந்து தரகு நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய 9 பேரைக் கொண்ட நிர்வாகக்குழு
4) பொதுமக்களின் நம்பிக்கையை ஏற்படுத்தி நிதி ஆவணங்களைத் தொடர்ச்சியாகவும் நியாயமாகவும் கொடுக்கல் வாங்கல் செய்து சிறந்த நிதிச்சந்தை தொழிற்படுதலை உறுதிப்படுத்தும்.
5) தொழில் முயற்சியாளர் வேண்டிய நிதியைச் சுலபமாக பெறவும் முதலீட்டாளர் பாதுகாப்பு இலாபகரமாக முதலீடு செய்யும் சூழ்நிலையையும் உருவாக்கும்

## (46) பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு
( SECURITIES & EXCHANGE COUNCIL )

1) பங்குச் சந்தையை ஒழுங்குபடுத்திக் கட்டுப்படுத்தும் அமைப்பு
2) ஆவணச்சபை என 1987ல் ஆரம்பித்து 1991ல் பிணையங்கள் பரிமாற்று ஆணைக்குழுவாக மாற்றம்
3) பங்குப் பரிமாற்று நிர்வாகத்தில் ஈடுபடல், அலகுப் பொறுப்பாட்சி நிறுவனங்களை அமைத்தல் போன்ற மேலதிக அதிகாரங்கள் கொண்டிருத்தல்
4) நியாயமான நிதிச்சந்தையை உறுதிப்படுத்தி முதலீட்டாளர் நலன்களைப் பாதுகாத்தலைப் பிரதான குறிக்கோளாகக் கொண்டது.
5) பங்குத் தரகர்களைப் பதிவு செய்து அனுமதித்து அரச கொள்கைகளுக்கமைய பங்குச்சந்தை இயக்கத்தை உறுதிப்படுத்தும்
6) இயக்குனர் சபைக்கான 10 பிரதிநிதிகளில் நிதிமந்திரியால் நியமிக்கும் அறுவருடன் மத்திய வங்கி துணை ஆளுனர்,கம்பனிப் பதிவாளர், திறைசேரி துணைச் செயலாளர் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தலைவரையும் உள்ளடக்கும்

## (47) வரையறுத்த மத்திய வைப்புத் திட்டக் கம்பனி
( CENTRAL DEPOSITARY CO (PVT) LTD )

1) மத்திய வைப்புத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு அமைக்கப்பட்டகம்பனி
2) வரையறுத்த சரக்குமுதல் பரிவர்த்தனமாற்றுக் கம்பனியின் துணைக் கம்பனி
3) நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக பங்குகள் விற்கப்படும் வரை வைத்திருப்பதே பிரதான குறிக்கோள்
4) தரகு நிறுவனத்தின் சிபார்சுடன் மத்திய வைப்புத் திட்டத்தில் கணக்கொன்றை ஆரம்பிக்க வேண்டும்.
5) விற்பனை செய்யவுள்ள பங்குச் சான்றிதழ்களை இக் கம்பனியே பாதுகாத்து வைத்துக் கொள்ளும். இதனால் சான்றிதழை கடனுக்கு ஈடாக கொடுக்க இக்கம்பனியே ஏற்பாடு செய்யும்.
6) பங்கு விற்பனையின் போது விற்பனையாளரின், கொள்வனவாளரின் கணக்குகளில் வரவு,செலவு வைக்கப்பட்டு தீர்க்கப்படும்.
7) பங்கு இலாபங்களை உரியகாலங்களில் பங்குதாரர்கள் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (48) வரையறுத்த மூலதன அபிவிருத்தி முதலீட்டுக் கம்பனி

(CAPITAL DEVELOPMENT & INVESTMENT COMPANY LTD)

1) மூலதனச் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக 1984 அமைக்கப்பட்ட கம்பனி
2) தனியார் துறை முயற்சிகளுக்கும் தனியார் அரசு கூட்டு முயற்சிகளுக்கும் கடன் வழங்குதலைப் பிரதான குறிக்கோளாகக் கொண்டது.
3) பங்குச் சந்தை நடவடிக்கைகள் தொடர்பாகவும் கடன் வசதிகள்வழங்கும்.
4) திறைசேரி, தேசிய அபிவிருத்தி வங்கி, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, மூலதனப் பங்களிப்பு

## (49) தேசிய அபிவிருத்தி வங்கி (NATIONAL DEVELOPMENT BANK)

1) தேசிய அபிவிருத்திக்காக 1979ல் அமைக்கப்பட்ட அபிவிருத்தி வங்கி
2) திறைசேரி, இலங்கை மத்திய வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கியால் ஆரம்பமூலதனமிடப்பட்டது.
3) உலக வங்கியில் விசேடமாக சர்வதேச அபிவிருத்திச்சங்கம், ஆசிய அபிவிருத்தி வங்கிகளில் நிதி பெற்றே கடன் வசதி வழங்கல்
4) பிறநாட்டு, உள்நாட்டு நிறுவனங்களுக்கும் பொது மக்களுக்கும்பங்குகள் வழங்கப்பட்டுத் தனியார் மயப்படுத்தலுக்குட்பட்டுள்ளது.
5) சிறிய நடுத்தரக் கைத்தொழில் கடன் திட்டத்தை நான்கு கட்டங்களாக மறுநிதி வசதியளித்து செயற்படுத்தி வந்துள்ளது.

## (50) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்

(DEVELOPMENT FINANCE CORPORATION OF CEYLON)

1) இலங்கையின் முதல் அபிவிருத்தி வங்கியாக 1955ல் ஆரம்பம்
2) தனியார் துறை முயற்சிகளுக்கு மட்டும் கடன் வசதி
3) சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், நெதர்லாந்து அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனங்களின் உதவிகளைப் பெற்றே கடன் வசதிவழங்கல்
4) பிறநாட்டு உள்நாட்டு நிறுவனங்களுக்கும் பொதுமக்களுக்கும் பங்குகள் வழங்கப்பட்டுத் தனியார் மயப்படுத்தலுக்குட்பட்டுள்ளது.
5) பொறிகள், கட்டிடங்களை தாபித்தல் தொடர்பான மூலதனச் செலவு நோக்கங்களுக்கு நீண்டகாலக் கடன் வழங்கும்
6) உள்ளூர் உண்டியல்களைக் கழிவுடன் மாற்றுவதன் மூலம் குறுங்காலக் கடன் வசதிகளையும் அண்மையில் வழங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிற்றிணைக்களம்

1. தொழிலாளர்களின் கூலிகள், சேவை நியதிகள் பற்றி நியமங்களை விதித்து நடைமுறைப்படுத்தல்.
2. தொழிலாளர்களின் பாதுகாப்பு, உடல் நலம், நலன்கள் பற்றி நியமங்களை விதித்து நடைமுறைப்படுத்தல்.
3. கைத்தொழில் பிணக்குகளைத் தவிர்த்தல், தடுத்தல், தீர்த்து வைத்தல்.
4. தொழில் கழகங்களைப் பதிவு செய்து மேற்பார்வை செய்து கட்டுப்படுத்தல்.
5. சமூக அபிவிருத்தி நோக்கிலான தொழிலாளர் கல்வியினை உருவாக்கி வளர்த்தல்.

## சமூக சேவைத் திணைக்களம்

1. கயரோக, குஷ்டரோக நோயாளர், வறியோர்களுக்கு உதவிப்பணம் வழங்கல்.
2. வெள்ளம், வரட்சி, . சூறாவளி போன்ற இயற்கை இடுக்கண்களுக்கு நிவாரணம் அளித்தல்.
3. பொதுநல சேவைகள் புரியும் அரச சார்பற்ற நிறுவனங்கட்கு நிதியுதவி யளித்தல்.
4. பலமிளந்தோர், முதியோருக்கு பராமரிப்பு பொதுநல சேவை புரிய ஏற்பாடு செய்தல்.
5. அங்கவீனமுற்றோருக்குதொழில்முறைப்பயிற்சி,சாதனங்கள் உபகரணங்கள் வழங்கல்.

## தேசிய தகவல் நிலையம்

1. பத்திரிகை உட்பட தொடர்பு சாதனம் சார்ந்தவர்களுக்கு பயிற்சி அளித்தல்.
2. பொதுத் தொடர்பு சாதனம் சார்ந்தவர்களுக்கு மாநாடுகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல் நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தல்.
3. தொடர்புத்துறைப் புள்ளிவிபரத் தகவல்கள் வழங்கல்.
4. தொடர்புத்துறை வெளியீடுகளுக்கான நூலக வசதி வழங்கல்.
5. சிறந்த தொலைபேசி, ரெலக்ஸ், ஃபக்ஸ் வசதிகளை வழங்கல்.

## இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவனம்

1. கணக்கீட்டு நியமங்களை அறிமுகம் செய்து செயற்படுத்தல்.
2. கணக்காய்வு நியமங்களை அறிமுகம் செய்து செயற்படுத்தல்.
3. தொழில்ரீதியான கணக்காளர்களை நிரம்பல் செய்தல்.
4. தொழில்சார் துறைகளுக்கான உயர்கல்வி வாய்ப்பை வகுத்தல்.
5. அரசாங்கத்திற்கு கம்பனிச் சட்டம், இறுப்பு முறைகள் தொடர்பான அபிவிருத்திகளுக்கான சிபார்சு செய்தல்.

## சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களம்

1. சிவில் விமானங்களைப் பதிவு செய்தல்.
2. சிவில் விமானங்களுக்கு வான் வெளித் தகமைப் பத்திரம் வழங்கல்.
3. விமான விபத்துக்களை நுண்ணாய்வு செய்தல்.
4. வான் போக்குவரத்து உடன்படிக்கைகளைச் செய்தல்.
5. விமான நிலையம், விமான இயக்குனர்களுக்கு உத்தரவுப் பத்திரம் வழங்கல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திறைசேரிச் சேவைகள் திணைக்களம்

1. அரச முகாமைகளுக்கு குறை நிரப்பு நிதி ஆதரவு வழங்கல்.
2. இலங்கைக் கணக்காய்வாளர் சேவையை நிர்வகித்தல்.
3. அரசாங்கத் துறைக்கு மதியுரைச் சேவைகளை வழங்கல்.
4. அரசாங்க நிதி முகாமையை மேற்கொள்ளல்.
5. அரச நிறுவனங்களில் முதலீடு செய்தல்.

## தேசிய சுவடிக் கூடத் திணைக்களம்

1. பதிவேடுகளின் முகாமை பற்றி தொழில்நுட்ப ஆலோசனை வழங்கல்.
2. எல்லாப் பிரசுரங்களின் பிரதிகளைப் பேணுதல்.
3. கடந்த காலப் பிரசுரங்கள் பற்றிய தகவல் சேவைகளை வழங்கல்.
4. அச்சியந்திரசாலைகள், வெளியீடுகள், புதினப் பத்திரிகைகள் ஆகியவற்றைப் பதிவு செய்தல்.
5. ஜே.ஆர். ஜயவர்த்தனா ஆராய்ச்சி நிலையத்தை தாபித்து நிர்வகித்தல்.

## ஓய்வூதியத் திணைக்களம்

1. அரச உத்தியோகத்தர்களுக்கான விதவைகள், அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்புக்களைப் பராமரித்தல், வழங்கல்.
2. ஓய்வூதியம் பெறுவோருக்கான சேவை பற்றிய பதிவேடுகளைப் பேணல். ஓய்வூதியம் வழங்கல்.
3. அரச உத்தியோகத்தர்களுக்கான பணிக்கொடை, இழப்பீடுகள், இழைப் பாறல் நலன்களைக் கணித்து வழங்கல்.
4. ஓய்வூதியத்திற்கு உரிமையற்ற மாத வேதனம் பெறும் உத்தியோகத்தரின் உரிய அளிப்புக்களை கணித்து வழங்கல்.
5. அரச திணைக்களம் தவிர்ந்த உத்தியோகத்தர் ஓய்வூதியப் பங்களிப்பை ஏற்று பராமரித்து வழங்கல்.

## கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம்

1. அரச கொள்கைகள் அறிவுறுத்தல்களைச் செயற்படுத்தல்.
2. நிதி நிர்வாகத்தையும் பிற பதவியினர் சேவைகளையும் ஏற்படுத்தல்.
3. திணைக்களங்களின் எல்லாக் கடமைகளையும் மேற்பார்வை செய்து கட்டுப்படுத்தல்.
4. திணைக்களங்களின் கணக்கீட்டுச் செம்மை பற்றி பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல்.

## சிறு கைத்தொழில் திணைக்களம்

1. சிறு கைத்தொழில்களைப் பதிவு செய்தல்.
2. இயந்திரம், சாதனங்களின் இறக்குமதிக்கு அனுமதித்தல்.
3. சிறு கைத்தொழில் பாதுகாப்பு முயற்சிகளை மேற்கொள்ளல்.
4. தொழிலாளர்கட்குப் தொழில்நுட்பப் பயிற்சி அளித்தல்.
5. வடிவமைப்பு, தரம் பேணல்களை அபிவிருத்தி செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிவாளர் அதிபதியின் திணைக்களம்

1. விடுமுறை நாட்கள் கட்டளைச் சட்டங்களை நிர்வகித்தல்.
2. தத்துவ அதிகாரங்களைப் பதிவு செய்தல் (பதிலி, பதிலாள்).
3. சொத்துக்கள், தொடர்பான உறுதிகளைப் பதிவு செய்தல் அவற்றைப் பாதுகாத்தல்.
4. நொத்தாரிசுமாரை மேற்பார்வை செய்தல், உறுதிகளின் முத்திரை வரியைச் சரிபார்த்தல்.
5. பிறப்பு, இறப்பு, விவாகங்களின் பதிவுகளைச் செய்து பதிவேடுகளைப் பாதுகாத்தல்.

## ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்

1. ஏற்றுமதிப் பயிர்களைப் பயிரிடுவதற்கான காணிகளைக் கண்டறிதல்.
2. பயிரிடுவோருக்கும், தொழிலாளர்களுக்கும் பயிற்சி அளித்தல்.
3. ஏற்றுமதி வாய்ப்புள்ள புதிய பயிர்களில் பரீட்சார்த்த சோதனையை மேற்கொள்ளல்.
4. பயிர் பாதுகாப்பு முயற்சிகளையும் உர உபயோகத்தையும் ஊக்குவித்தல்.
5. பயிரிடுவோருக்கான தகவல்களை பரப்புவதுடன் சந்தைப்படுத்தல் வசதிகளையும் ஒழுங்கு செய்தல்.

## வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

1. இலங்கையின் வெளிநாட்டுத் தொடர்புகளைப் பேணுதல்.
2. வெளிநாடுகளுடன அரசியல் தொடர்புகளை பேணுதல்.
3. சர்வதேச அமைப்புக்களில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தல்.
4. வெளிநாடுகளோடு உடன்படிக்கைகள் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடாத்தல்.
5. வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரங்களுக்கு பணிப்புரை வழங்கல்.

## தகவல் திணைக்களம்

1. பத்திரிகையாளர் மாநாடுகளை ஒழுங்கு செய்வதுட்பட பத்திரிகைகளுக்கு உத்தியோக பூர்வ புதினங்களை விநியோகித்தல்.
2. இலக்கியங்களைத் தயாரித்து வழங்கிப் பிரசித்தப்படுத்தல்.
3. பாரம்பரிய கலைகள், கைப்பணிகளை ஊக்குவித்தல்.
4. இலங்கை பற்றிய தகவல்களை வழங்குதல்.
5. அரசாங்கத்தின் வெளியீடுகளின் விற்பனை,களஞ்சியத்திலிடுகைகளில் ஈடுபடுதல்.

## தொகை மதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்

1. குறித்த கால இடைவெளிகளில் சனத்தொகை மதிப்புகளை மேற்கொள்ளல்.
2. மாகாண செயலகங்கள், வெளிக்கள பதவியினர் தொகுதியொன்றின் மூலம் நடைமுறைப் புள்ளி விபரங்களைச் சேகரித்தல்.
3. மாதிரி அளவைகள், ஆராய்ச்சி பயிற்சிகளை மேற்கொள்ளல்.
4. கைத்தொழில், கமத்தொழில், வியாபாரத் தரவுகளைத் திரட்டி தொகுத்தல்.
5. புள்ளிவிபரத் தரவுகளை முறைப்படுத்தி (சுட்டி) வெளியீடு செய்தல்.

(உ+ம்) கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கான குழு

1. தனியார் மயப்படுத்த வேண்டிய அரச நிறுவனங்களை இனங்காணல்.
2. தனியார் துறையினர் முதலீடு செய்வதற்கான வாய்ப்புக்களை அதிகரித்தல்.
3. அரசநிறுவனங்கள், சொத்துக்களின் விற்பனைக்கு பொறுப்பாக இருத்தல்.
4. அரச நிறுவனங்களைக் கொள்வனவு செய்யவுள்ளோர் விண்ணப்பங்களைப் பரிசீலணை செய்தல்.
5. அரச சொத்துக்களின் விற்பனை தொடர்பான பணம் வசூலிப்பதை மேற்பார்வை செய்தல்.

## தொலைத் தொடர்புக் கூட்டுத்தாபனம்

அஞ்சல் தொலைத் தொடர்புத்திணைக்களம் முதலில் அஞ்சல் திணைக்க ளம், தொலைத்தொடர்புத் திணைக்களம் என இரு நிறுவனங்களாக்கப்பட்டது. தொலைத் தொடர்புத் திணைக்களம் பின் தொலைத் தொடர்புக் கூட்டுத் தாபனமாக மாற்றப்பட்டது.

**தொழிற்பாடுகள்**

1. தொலைபேசி இணைப்புக்கான அனுமதி வழங்கல்.
2. தொலைபேசி இணைப்புக் கட்டணங்களை வசூலித்தல்.
3. தொலைபேசிச் சேவையை தொழிற்படுத்தல்.
4. தொலைபேசி பட்டியல்களை வழங்கி, கட்டணங்களை வசூலித்தல்.
5. தொலைபேசி வாடிக்கையாளர் சேவைகளை வழங்கல்

## வரையறுக்கப்பட்ட வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்

வீடமைப்பு அபிவிருத்திக்கான கடன் வழங்கலை இலகுபடுத்த அமைக் கப்பட்ட தாபனமாகும். தனியார்துறை, அரசதுறை கூட்டாக அமைக்கப்பட்ட சங்கமாகும். பல திறத்தினரும் கடன் பெறுதலை ஊக்குவிக்க இரண்டு வகை யான உறுப்பினர்கள் இதில் காணப்படுவர்.

1. **ஒப்பப்பணம் செலுத்தும் உறுப்பினர்** 50 ருபா பெறுமதியான பங்கைக் கொள்வனவு செய்ய வேண்டும். கடன்பெறக் குறைந்தது 10 பங்கைக் கொள்வனவு செய்ய வேண்டும். கொள்வனவு செய்த பங்குப் பெறுமதியின் 5 மடங்கிற்கு கடன் பெறலாம்.
2. **தொகைப்பணம் செலுத்தும் உறுப்பினர்** 100 ருபா பெறுமதியான பங்கைக் கொள்வனவு செய்ய வேண்டும். இவர்களுக்குப் பங்கிலாபம் வழங்கப்படும். பணிப்பாளர் சபைக்குத் தெரிவு செய்யப்பட்டு நிர்வாகத்திலும் பங்கு பற்ற முடியும்.

## புகையிரதத் திணைக்களம்

1. பிரயாணிகள் புகையிரதம்,பொதிப்புகையிரதம் என்பவற்றைத் திறமையாக நடாத்தல்,
2. இரும்புபாதை,சைகை,தொடர்பிணைப்புஒழுங்கு முறைகளையும் பேணல்,
3. புகைவண்டிப் பெட்டிகளையும் என்சின்களையும் திருத்துதல் பேணுதல்.
4. புகைவண்டிப் பெட்டிகள்,என்சின்கள், இரும்புப்பாதை சைகைப்பொருட்கள் உதிர்பாகங்கள் என்பவற்றை உற்பத்தி செய்தல்
5. புகையிரத ஆளணியினர்களுக்கு முகாமை, உற்பத்தி பேணல்,வினைப்படுத்தல் என்பவற்றுக்கு பயிற்றுவித்தல்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | க.பொ.த உயர்தரம் கணக்கியல் 1979 - 1989 (7 Exams) (பரீட்சை வினா விடை) | 95.00 |
| 2. | க.பொ.த உயர்தரம் வர்த்தகமும் நிதியும் 1995 (வினா விடை) | 20.00 |
| 3. | க.பொ.த உயர்தரம் வர்த்தகமும் நிதியும் 1990 - 1995 (8 Exams) (வினா விடை) | 120.00 |
| 4. | க.பொ.த உயர்தரம் கணக்கியல் - 1995 (வினா - விடை) | 25.00 |
| 5. | க. பொ. த சாதாரணம் கணிதம் 8 Exams 1988 - 1995 (வினாத் தொகுப்பு) | 40.00 |
| 6. | க. பொ. த சாதாரணம் விஞ்ஞானம் 8 Exams 1988 - 1995 (வினாத் தொகுப்பு) | 40.00 |
| 7. | க.பொ.த உயர்தரம் கணக்கியல் 1980 - 1995 (வினாத் தொகுப்பு) | 65.00 |
| 8. | க.பொ.த உயர்தரம் பௌதீக இரசாயனம் I | 130.00 |
| 9. | க.பொ.த உயர்தரம் புதிய பாடத்திட்டம் : | |
| | – உயிரியல் பிரிவு | 40.00 |
| | – கணித பிரிவு | 30.00 |
| | – வர்த்தக பிரிவு | 20.00 |
| 10. | மடக்கை வாய்பாடுகள் No . 1 | 5.00 |
| | No . 2 | 3.00 |
| | பெருக்கல் வாய்பாடு | 3.00 |
| 11. | க.பொ.த உயர்தரம் வர்த்தகமும் நிதியும் பரீட்சை வழிகாட்டி | 60.00 |
| 12. | க.பொ.த உயர்தரம் வர்த்தகமும் நிதியும் (23 Exams) 1979 - 1995 | 190.00 |
| 13. | க.பொ.த உயர்தரம் பௌதீகம் அமைப்புக் கட்டுரை வினாக்கள் விடைகளுடன் | 50.00 |
| 14. | க.பொ.த உயர்தரம் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் | 35.00 |
| 15. | க.பொ.த உயர்தரம் வர்த்தக நிறு வனங்கள்(100) | 40.00 |
| 16. | க.பொ.த சாதாரணதரம் வர்த்தகம் 1980 - 1995 (பரீட்சை வினாக்கள் விடைகளுடன்) | 50.00 |
| 17. | க.பொ.த உயர்தரம் அளவையியல் II விஞ்ஞான முறையியல் | 65.00 |
| 18. | சிறுவர் சித்திரம் ஆண்டு1, 2 | 35.00 |
| 19. | ஆண்டு 9 வர்த்தகம் (வினா விடை) | 30.00 |

*சகலவித சிக்கன அச்சிடல்களுக்கும்*

**SARASU PUBLICATIONS**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

M 1 BAMBALAPITIYA FLATS COLOMBO - 4 T.P: 590462